திரும்பிப் பார்க்கிறேன்

பதிப்பாசிரியர்

எஸ். தாயப்பன்



படிப்பவர்கள் தம்மையே அலசி
ஆராய வைக்கும் ஜாமக்காரன்
Dr. புஸ்பராஜ் அவர்களின் சாட்சி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

‘திரும்பிப் பார்க்கிறேன்’

(படிப்போர் தம்மையே அலசி ஆராய
வைக்கும் ஜாமக்காரன் டாக்டர் புஷ்பராஜ்
அவர்களின் அனுபவ சாட்சி)

ஆசிரியர்

டாக்டர் புஷ்பராஜ்

பதிப்பாசிரியர்

எஸ்.தாயப்பன்

(உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் குற்றமற்றதாக
இருக்கும்படி காத்துக் கொள்வீர்களாக! - 1 தெச 5:23)

நன்கொடை: ரூ.5/-

திரும்பிப் பார்க்கிறேன் – ஜனவரி, 2016 – 3,000 பிரதிகள்

பதிப்பாசிரியரின் பிற நூல்கள்

		On Circulation	Rs.
1.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தமிழ்)	3,40,000	10/-
2.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (கன்னடம்)	65,000	10/-
3.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (மலையாளம்)	40,000	10/-
4.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தெலுங்கு)	10,000	10/-
5.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஹிந்தி)	15,000	10/-
6.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஒடிசா)	6,000	10/-
7.	My Cry & Joyful Life (English)	75,000	10/-
8.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	1,10,000	10/-
9.	பாவத்தின் சம்பளம் நரகம் (தமிழ், கன்னடம்)	1,20,000	10/-
10.	இயேசு கிறிஸ்து உங்களோடு பேசுகிறார்	50,000	10/-
11.	என் ஊழியக்காரனே?	20,000	10/-
12.	இந்தியாவுக்கு இயேசு தேவை, ஏன்?	40,000	10/-
13.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே!	40,000	10/-
14.	நீங்களே எனக்கு சாட்சிகள்	20,000	10/-
15.	உண்மையான கடவுள் யார்?	25,000	10/-
16.	அற்புத சுகமளிக்கும் வைதீஸ்வரர் இயேசு	20,000	10/-
17.	இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை?	15,000	10/-
18.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு (பாகம் 1)	15,000	10/-
19.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு (பாகம் 2)	15,000	10/-
20.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் (பாகம் 1)	20,000	10/-
21.	நிறைவேறிய தீர்க்க தரிசனங்கள் (பாகம் 2)	20,000	10/-
22.	நிறைவேறிய தீர்க்க தரிசனங்கள் (பாகம் 3)	5,000	10/-
23.	கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு (தமிழ், கன்னடம்)	10,000	10/-
24.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி - டாக்டர் கிறிஸ்டோபர்	15,000	10/-
25.	இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு - டாக்டர் சுந்தர் ஏசுவடியான்	10,000	10/-
26.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 1)	5,000	10/-
27.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 2)	5,000	10/-
28.	பரலோகம் செல்ல எளிதான வழி (சுவிசேஷத்தை அறிவிக்கும் முறை)	5,000	10/-
29.	அரிய வேதம் அறிய வேண்டிய வேதம்	10,000	10/-
30.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து (பாகம் 1)	10,000	10/-
31.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து (பாகம் 2)	10,000	10/-
32.	விவிலியமும் விஞ்ஞானமும்	10,000	10/-
33.	கிறிஸ்துவத்தைக் குறித்து இந்துக்களின் பொதுவான கேள்வியும், அதற்குரிய பதிலும் (பாகம் 1)	10,000	10/-
34.	கிறிஸ்துவத்தைக் குறித்து இந்துக்களின் பொதுவான கேள்வியும் அதற்குரிய பதிலும் (பாகம் 2)	10,000	10/-
35.	ஜெகோவா விட்னஸின் உபதேசமும் அதற்கு பைபிளின் பதிலும் கேள்வியும் (பாகம் 1)	5,000	10/-

36.	ஜெகோவா விட்னஸின் உபதேசமும் அதற்கு பைபிளின் பதிலும் கேள்வியும் (பாகம் 2)	5,000	10/-
37.	ஜெகோவா விட்னஸின் உபதேசமும் அதற்கு பைபிளின் பதிலும் கேள்வியும் (பாகம் 3)	5,000	10/-
38.	ஜெகோவா சாட்சிக்கு சத்தியத்தை அறிவிப்பது எப்படி (பாகம் 1)	5,000	10/-
39.	ஜெகோவா சாட்சிக்கு சத்தியத்தை அறிவிப்பது எப்படி (பாகம் 2)	5,000	10/-
40.	சிலை வணக்கம் சின்னாபின்னப்படுத்தியதே	5,000	10/-
41.	கிறிஸ்தவர்களை எதிர்ப்பதின் விளைவு	5,000	10/-
42.	தெய்வீக சுகம் உண்டா?- எபி சுந்தர்ராஜ்	10,000	10/-
43.	கிறிஸ்துவின் இரண்டாம் வருகை - சிஸ்டர் மரியா	10,000	10/-
44.	**VCD** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (தமிழ்)	3,60,000	10/-
45.	**VCD** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (கன்னடம்)	60,000	10/-
46.	**VCD** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (ஹிந்தி)	30,000	10/-
47.	**VCD** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (மலையாளம்)	10,000	10/-
48.	**VCD** எழுந்து காட்டுவோம் (தமிழ்)	20,000	10/-
49.	**VCD** முக்திக்கு வழி கிறிஸ்தவமே (தமிழ்)	15,000	10/-
50.	**VCD** கதாகாலட்சேபம் (தமிழ்	20,000	10/-
51.	**VCD** தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தாவே	10,000	10/-
52.	தமசோம் ஜோதிர்கமய	5,000	10/
53.	வேதமா? விஞ்ஞானமா? - **Rev.** பால்ராஜ்துரை	5,000	10/-
54.	மனிதனே நீ யார்? - **Rev.** பால்ராஜ்துரை	5,000	10/-
55.	சீரழிய சினிமா பாருங்கள் - **Rev.** பால்ராஜ்துரை	5,000	10/-
56.	தெய்வத்தை தேடுவோம் வாருங்கள் - **Rev.** பால்ராஜ்துரை	5,000	10/-
57.	இந்து மதம், இந்திய மதமா? - உறையூர் வளவன்	5,000	10/-
58.	ஆரோக்கிய வாழ்வுக்கு ஒரு தெய்வீக அழைப்பு	5,000	10/-
59.	இராம ஜென்ம பூமி- உறையூர் வளவன்	5,000	5/-
60.	மதமாற்றமல்ல, மனமாற்றமே தேவை - **R.** ஸ்டான்லி	5,000	5/-
61.	மனமாற்றத்தை பெருக்குவது எப்படி? - **Rs.** ஸ்டான்லி	5,000	5/-
62.	வாழ்க்கையைவளப்படுத்தும் வார்த்தைகள்	5,000	5/-
63.	நாலு வேதங்களின் நாயகர் இயேசு	10,000	5/-
64.	ஓர் அவசர அறைகூவல்	10,000	5/-
65.	கர்நாடகாவிற்காக கதறி அழும் கல்வாரி ஐக்கிய ஜெபக் குழுவும் இராணுவ சகோதரர்களும் (தமிழ், கன்னடம்)	5,000	5/-
66.	திரித்துவம் - பாஸ்டர் சாலமோன் ராஜா	5,000	5/-
67.	இஸ்லாமியர்களின் கேள்விகளுக்குப் பதில் - சாலமோன் ராஜா	5,000	5/-
68.	இந்திய ஊழிய உயர்வுக்கு ஒரு புதிய பார்வை	5,000	5/-
69.	ஆனந்த புதுவாழ்வு கண்டேன்	30,000	5/-
70.	நித்யஜீவன் தரும் நிகரில்லா இயேசு		5/-
71.	இது உங்கள் உயிர் காக்கும் முயற்சி - சாந்திதேவி	10,000	2.50
72.	மோட்ச வாழ்வுக்கு வழி - சாந்திதேவி	5,000	2.50
73.	**DVD** ஆனந்த புதுவாழ்வு **(Telefilm)**	2,000	100
74.	**DVD** அமாவாசை **(Telefilm)**	2,000	100

இந்த நூல் மற்றும் விசிடி கிடைக்கும் முகவரி
எஸ்.தாயப்பன்
12, ஜி.டி.நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ -1,
சேலையூர் போஸ்ட், சென்னை - 600 073.
தொலைபேசி: 044-22294288, மின்னஞ்சல்: **sakthiprabha@yahoo.com**

நூலை அனுப்ப சில விதிகள்:

ஒவ்வொரு நூலுக்கும், விசிடிக்கும் நன்கொடை ரூ.10/- + தபால் செலவு ரூ.1, M.O., D.D. அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை M.O பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் வெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் தொலைபேசி, செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. MO, DD பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

விசிடி அனுப்ப தபால் செலவு மட்டும்: கொரியரில் பதிவு பார்சலில் அனுப்ப (தமிழ்நாட்டிற்குள்) 1 முதல் 15 விசிடி வரை அனுப்ப ரூ.50/-, 16 முதல் 25 விசிடி அனுப்ப ரூ.60/-

100 விசிடிக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் கே.பி.என். பார்சல் சர்வீஸ் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப் படும்.

'வாழ்க்கையை வளப்படுத்தும் வார்த்தைகள்'

கர்த்தர் இந்த அடிமையைக் கொண்டு ஆசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் வெளியிட்ட புத்தகங்கள், விசிடி மற்றும் டிவிடிக்கள் ஒவ்வொன்றிலும் எதைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது என்பதை வாசகர்கள் அறிந்து, தேவையான புத்தகம், சீடிக்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக, 'வாழ்க்கையை வளப்படுத்தும் வார்த்தைகள்' என்னும் ஒரு நூலும் வெளியிட்டு இருக்கிறேன். ஆண்டவருடைய வருகைக்கு நீங்கள் ஆயத்தமாக, மற்றவர்களையும் ஆயத்தப்படுத்த, ஆதாயப்படுத்த ஆவிக்குரிய புத்தகங்களை தேர்வு செய்ய இந்த நூல் உங்களுக்கு உதவும்.

- எஸ்.தாயப்பன்

நன்கொடை - ரூ.5/-

பதிப்பாசிரியர் உரை

2015 அக்டோபர் ஜாமக்காரன் இதழில் அதன் ஆசிரியர் டாக்டர் புஷ்பராஜ் அவர்களின் அனுபவ சாட்சியைப் படித்தேன். எல்லா வயதினருக்கும் குறிப்பாக வாலிப பிள்ளைகள் தங்களை தற்காத்துக் கொள்ள எப்படி இருக்க வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும் என பல நல்ல ஆலோசனைகளை தமது அனுபவ சாட்சியின் மூலமும், வேத வசனங்களின் மூலமாகவும் மிக அருமையாக எழுதியிருந்தார். இது அனைவருமே படித்து கடைப்பிடிக்க வேண்டிய ஆலோசனைகள் என்பதால் இதை பலருக்கும் பயனுள்ளதாக பிரசுரிக்க அவருக்கு போன் செய்து அனுமதி கேட்டேன்.

ஒரு வருடத்துக்கு முன்பு எனக்கும் அவருக்கும் ஒரு சிறு உரசல், ஊழிய கருத்து வேறுபாடு ஏற்பட்டபோதும் (முழு விபரத்தையும் 'சைவமும், வைணவமும் கிறிஸ்தவமும்' என்கிற என்னுடைய நூலில் பாருங்கள்) அதையெல்லாம் மனதில் கொள்ளாமல், பெரிதுபடுத்தாமல், பெரிய மனதோடு அனுமதி தந்தார். அதுதான் அவரின் பெருந்தன்மை. பல விஷயங்களை அவர் வாழ்வில் நடந்தவைகளை மனந்திறந்து எழுதியுள்ளார். சின்ன சின்ன விஷயங்களில் கூட நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்கு இது ஒரு எச்சரிக்கை.

கர்த்தர் தாமே அவரையும் அவரின் ஊழியங்களையும் ஆசீர்வதிப்பாராக!

இறைப்பணியில்
உங்கள் சகோதரன்
எஸ்.தாயப்பன்

சென்னை–73
10.1.2016

கர்த்தரின் இரண்டு ஆயுதங்கள்

கர்த்தர் மனிதனை படைத்ததற்கு துக்கப்படுகிறார்

கர்த்தர் தாம் நேசிக்கும் விசுவாசிகளை மரணம் வரை விழாமல் வழி நடத்த ஆசைப்படுகிறார். மனிதன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் ஊழியனாக இருந்தாலும், விசுவாசியாக இருந்தாலும் பல சந்தர்ப்பங்களில் அவன் பெலவீனங்களில் அவன் அறியாமல் விழுந்து போகிறான். பலமுறை கர்த்தர் தான் நேசிக்கும் மனிதனின் சில செயல்களைக் கண்டு மிகவும் மனம் வேதனைப்படுகிறார். உலக ஆரம்பத்திலேயே மனிதனை ஆசை ஆசையாய் உண்டாக்கிய பின், தான் என்ன நோக்கத்தோடு மனிதனை உண்டாக்கினாரோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றாததால் மனிதன் தன் கீழ்ப்படியாத பாவத்தால் தன்னை உண்டாக்கிய தேவனின் மனதையே நோகடித்து விடுகிறான். ஆதி 6:6–இல் **(தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது)**. மனிதனை ஏன் தான் உண்டாக்கினேனோ என்று கர்த்தர் துக்கப்பட்டதாக எழுதப்பட்டு இருக்கிறது. ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரும் போது சின்னச் சின்ன கீழ்ப்படியாமை கூட ஆண்டவரின் மனதைத் துக்கப்படுத்தி விடும்.

கர்த்தர் நம்மை அன்பின் நிமித்தம் சிட்சிக்கிறார்

கீழே என் தனிப்பட்ட வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை வாசகர்களாகிய உங்களுக்கு அறிவிக்கிறேன். இந்த சம்பவத்தை சில இடங்களில் நான் பிரசங்கித்த கன்வென்ஷன்களில் கூறியிருக்கிறேன். என் எல்லா பிரசங்கத்திலும் நான் மறக்காமல் கூறுவது தேவனின் இரண்டு ஆயுதங்கள் பற்றியதாகும். இந்த ஆயுதங்களைக் கர்த்தர் தான் நேசிப்பவர்களை கொல்வதற்கு அல்ல, திருத்துவதற்கு பயன்படுத்தும் ஆயுதங்களாகும். 1. கிருபை யின் ஆயுதம், 2. சிட்சையின் ஆயுதம்.

கிருபையின் ஆயுதம்

பாவம் செய்யும் மனிதனோடு பிரசங்கம் மூலமாக, வசனத்தின் மூலமாக, வேதம் வாசிக்கும் போது கர்த்தர் மனிதனோடு பேசிப் பார்ப்பார், அல்லது உணர்த்துவார். இதுதான் கிருபையின் ஆயுதம். இதற்கு கீழ்ப்படிந்து நாம் நம்மை சரிப்படுத்திக் கொண்டால் நல்லது. பெற்றோர் மூலம் ஆலோசனைகளைக் கூறுவார். ஊழியர்கள் மூலம் ஆலோசனை கூறுவார். தினசரி வேதம் வாசிக்கும் போது வசனத்தின் மூலம் பேசி உணர்த்துவார். நாம் அதற்கு செவி சாய்க்காமல் போனால், கீழ்ப்படியாமல் போனால் நம்மை திருத்திக் கொள்ளாமல் போனால், அப்போது தான் தன்னுடைய இரண்டாம் ஆயுதமான சிட்சையின் ஆயுதத்தை கர்த்தர் கையில் எடுப்பார். சில சமயம் அது பயங்கரமாக இருக்கும். அந்த இரண்டாம் ஆயுதம் சிலருக்கு தோல்வியாக இருக்கும். ஏமாற்றமாகவும் இருக்கும். பெருத்த வியாபார நஷ்டமாகவும் இருக்கும். சில சமயம் நாம் மிகவும் நேசிக்கும் மகள் - மகன், பெற்றோர், மனைவி, கணவன் ஆகியோரின் நோய், மரணத்தின் மூலமாகவும் பேசுவார். இப்படிப்பட்ட நோய், மரணத்தின் மூலமாக அதன் காரணமாக நமக்கு ஏற்படும் வேதனை மூலமாக கர்த்தர் நம்மோடு பேசுகிறார் என்று நாம் புரிந்து கொண்டு நம்மை சரிப்படுத்திக் கொண்டால், வீட்டில் உண்டான அந்த மரண சூழ்நிலையில் கூட நம்மால் கர்த்தரை துதிக்க முடியும். நாம் நம்மை சரிப்படுத்திக் கொண்டால் நஷ்டங்களை ஜெயமாக கர்த்தர் மாற்றுவார்.

பிரபலமான ஊழியக்காரன் ஆனேன்

1964 ஆம் வருடம் நான் இரட்சிக்கப்பட்டேன். மனம் திரும்புதலின் அனுபவத்தைப் பெற்றேன். மனந்திரும்பிய சில வாரங்களிலேயே என் டாக்டர் தொழிலோடு இணைந்து சுவிசேஷ ஊழியம் செய்யும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. FEBA சத்தியவசனம் (BACK TO THE BIBLE (SRI LANKA) ஆகிய வானொலி நிகழ்ச்சிகளில் நான் தொடர்ந்து வேத பாடம் நடத்த ஆரம்பித்தவுடன், இந்தியா விலும், வெளிநாடுகளிலும் நான் பிரபலமானேன். கன்வென் ஷன் பிரசங்கியாக உபயோகிக்கப்பட்டேன். ஒவ்வொரு கூட்டத் திலும் ஆயிரக்கணக்கில் மக்கள் இரட்சிக்கப்பட்டனர். ஆயிரக் கணக்கில் மனந்திரும்பினர். ஒவ்வொரு கூட்டத்திலும் மக்கள் பல்வேறு வியாதிகளிலிருந்தும் பிசாசின் பிடியிலிருந்தும்

விடுவிக்கப்பட்டனர். குறுகிய காலத்தில் இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும், கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை பிரபல பிரசங்கியாக அறியப்பட்டேன். 162 உலக நாடுகளில் கர்த்தர் என்னை கிருபையாக உபயோகித்தார்.

என் மனைவிக்கு தீராத தலைவலி

1970 இல் எனக்கு திருமணமானது. என் மனைவி சேலம் அரசாங்க ஆஸ்பத்திரியில் பணியாற்றிக் கொண்டிருந்தார். கோயமுத்தூர் சிஎஸ்ஐ டையாசிஸ்ஸில் ஆயராகப் பணியாற்றிய மறைந்த ப. நோயல், சிஎஸ்ஐ பள்ளி ஆசிரியையாக பணியாற்றிய திருமதி இசபெல்லா அவர்களின் இரண்டாவது மகள் திருமதி மங்களவதனி அவர்கள்தான் என் மனைவியானார்.

1971 இல் முதல் பிள்ளையாக மகன் சாமுவேல் பிறந்தார். 1974 இல் மகள் ஷீபா இவாஞ்சலின் பிறந்தார். மகள் பிறந்த சில வாரங்களில் என் மனைவி தலைவலியால் துடித்துப் போனார். இந்த தலைவலி பல வருடங்களாக என் மனைவிக்கு இருந்தது. மகள் பிறந்த பின் அந்த வலி மிகவும் அதிகமானது. தாங்கக் கூடாததாக மாறியவுடன் வேலூர் சிஎம்சி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று அந்தத் தலைவலிக்கான காரணத்தைக் கண்டுபிடிக்கலாம் என்று தீர்மானித்தேன்.

சேலம் ஜி.எச்.சில் என் மனைவியைச் சேர்த்தேன்

அதற்கு முன் சேலம் அரசாங்க மருத்துவமனை தலைமை (டிஎம்ஓ) டாக்டரிடம் காட்டி நீண்ட நாள் விடுப்பில் செல்ல ஏற்பாடு செய்ய என் மனைவியை அழைத்துச் சென்றேன். டி.எம்.ஓ அவர்கள் என் நண்பரும், தேவ பக்தியுள்ள நல்ல கிறிஸ்தவரானதால், அவர் வீட்டுக்கே என் மனைவியை அழைத்துச் சென்றேன். அவர் என்னிடம் நீங்கள் சிஎம்சி சென்றால் மூளை பரிசோதனை, மற்ற பரிசோதனைகளைச் செய்ய அதிக பணம் செலவாகும். ஆகவே இலவசமாக அரசாங்க ஆஸ்பத்திரியிலேயே எல்லா பரிசோதனைகளையும் முடித்துக் கொண்டு செல்வதுதான் நல்லது என்றார். உடனே சேலம் அரசாங்க ஆஸ்பத்திரியில் என் மனைவியைச் சேர்ந்தேன். பரிசோதனைகள் நடக்க ஆரம்பித்தது. என் மனைவியை ஆஸ்பத்திரியில் சேர்த்தவுடன் நான் என்னுடைய ஆஸ்பத்திரி வேலைக்கு டேனிஷ்பேட்டைக்கும், சொந்த கிளினிக் குக்கும் வியாதியஸ்தர்களைக் கவனிக்கச் சென்று விட்டேன்.

என் மனைவி சுயநினைவின்றி மரணப் படுக்கையில்

அன்று மாலை சேலம் திரும்பினேன். என் மனைவியைப் பார்க்க நேராக ஆஸ்பத்திரிக்கு சென்றேன். ஆஸ்பத்திரியில் என் மனைவி படுத்திருக்கும் அறைக்கு முன் ஏராளமான ஆட்கள் கூட்டம் நிற்பதைக் கண்டேன். சேலத்திலிருந்த சிஎஸ்ஐ ஆலய ஆயர்களும், அங்கு நின்று கொண்டிருந்தார்கள். பெந்தகொஸ்தே சபை பாஸ்டர்கள், சபை ஊழியர்களும், சபை மக்களும் கூட்டமாக நின்று பேசிக் கொண்டிருப்பதைக் கண்டேன். என் மனைவி மரித்துப் போயிருப்பாரோ என்ற பயம் மனதின் உள்ளே, யாரிடமும் பேசாமல் வேக வேகமாக நோயாளி அறைக்குள் சென்றேன். மனைவி மரிக்கவில்லை. ஆனால் சுயநினைவு இன்றி இரண்டு கைகளிலும் விதவிதமான பாட்டில் மருந்துகளை நரம்பு வழியாக ஏற்றிக் கொண்டிருந்தார்கள். பல டாக்டர்கள் மனைவியின் படுக்கையைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். அருகே சில மருத்துவ கருவிகளை பார்த்தபடி டாக்டர்கள் நின்று கொண்டிருந்தனர். மனைவியின் நிலைமை மோசமாகிக் கொண்டே இருந்தது.

மனைவி உயிர் பிழைப்பது கடினம்

இரவு சுமார் 8 மணி இரண்டு டாக்டர்கள் என்னிடம் தனியாக வந்து உங்கள் மனைவி உயிர் பிழைப்பது கடினம். ஆகவே யார் யாருக்கு உறவினர்களுக்கு அறிக்க வேண்டுமோ அறிவித்து விடுங்கள் என்றார்கள். மனைவியின் கடைசி கட்டம் அது என்பதை விளங்கிக் கொண்டேன். நான் தபால் ஆபீஸ் சென்று தந்தி மூலம் செய்தி அறிவிக்கப் போனேன். இரவு 10 மணிக்கு ஆஸ்பத்திரிக்கு திரும்பி வந்தேன். அப்போது ஒரு டாக்டர் அறையைவிட்டு வெளியே வந்து உங்கள் மனைவியின் இரத்தம் உறைய ஆரம்பித்துள்ளது. ஆகவே நரம்பு வழியாக உள்ளே மருந்துகள் போகவில்லை என்றார்.

நாடித் துடிப்பு நின்று போகும் நிலைக்கு என்ன காரணம்?

நான் அன்று காலை சேலம் அரசாங்க மருத்துவமனையில் என் மனைவியை பரிசோதனை நடத்த ஏற்பாடு செய்து விட்டேன். மனைவியின் மூளை பரிசோதனை மற்ற பரிசோதனை யாவும் முடிந்து விட்டது. அன்று மதியம் திடீர் என்று என் மனைவிக்கு தலைவலி மிக அதிகமானது. அப்போது டூட்டியிலிருந்த டாக்டர் வலி நிவாரண மருந்தான நோவாலிஜின் என்ற ஊசி மருந்தை

மனைவியின் உடலில் செலுத்தினார்கள். ஆனால் அந்த மருந்து என் மனைவிக்கு அலர்ஜியை (ஒவ்வாமை) உண்டாக்கி நினைவிழந்து போக வைத்து விட்டது. இருதயத் துடிப்பும் குறைய ஆரம்பித்து விட்டது. உடனே அனைத்து சிறப்பு டாக்டர்களும், தலைமை மருத்துவரும் டிஎம்ஓவுடன் இணைந்து செயற்கை முறையில் இருதயத் துடிப்பை துடிக்கச் செய்ய பல முயற்சிகளை மேற்கொண்டார்கள். முடியவில்லை. மற்றொரு சிறப்பு டாக்டர் வரவழைக்கப்பட்டார். அப்போது தான் இரண்டு கைகளிலும் விதவிதமான மருந்துகளை செலுத்த ஆரம்பித்தனர். அதன் கடைசி கட்டமாகத்தான் அன்று இரவு 12.30 மணிக்கு என்னை அழைத்து நாடி நின்று போகும் நிலை வந்துவிட்டதாக என்னிடம் அறிவித்தார்கள்.

என் மனைவியின் கடைசி அத்தியாயம்

என் மனைவியின் கடைசி அத்தியாயம் எழுதப்படுகிறது என்பதை உணர்ந்தேன். மனைவியின் கட்டிலின் மறுபக்கம் என் மாமியார் கையில் என் இரண்டாவதாகப் பிறந்த பச்சிளம் குழந்தையைப் பிடித்துக் கொண்டு எல்லாரும் அழுது கொண்டிருந்த காட்சி என் மனதை உலுக்கியது. எங்காவது தனியாக உட்கார்ந்து கர்த்தரிடம் வாய்விட்டு அழ வேண்டும் என்று அலைந்தேன். ஆனால் என் கூடவே இருந்த ஊழியர்கள், ஆயர்கள் அனைவரும் என்னை தனிமையில் விட மனமில்லாமல் என் கூடவே வருகிறார்கள். தனிமையில் ஜெபிக்க எப்படி இவர்களை விட்டு விலகுவது என்று புரியாமல் தவித்தேன்.

பொதுக் கழிப்பிடம் என் ஜெப அறையானது

அப்போது அரசாங்க ஆஸ்பத்திரியின் பொதுக் கழிப்பிடம் கண்டேன். யாரும் என்னைப் பின்பற்றி வரக் கூடாத இடமாக அதை தெரிந்து கொண்டேன். கழிப்பிடத்தின் கதவைச் சாத்தினேன். பொதுமக்கள் உபயோகிக்கும் பொதுக் கழிப்பிடம் எப்படியிருக்கும் என்று அறிவீர்கள்.

கால் வைக்க இடம் இல்லாமல் பல இடத்தில் மனிதக் கழிவுகள். அதன் மத்தியில் நான் நின்ற வண்ணம் கழிவு இல்லாத இடமாகப் பார்த்து என், காலை வைத்து, அங்கே நின்ற வண்ணம் கைகூப்பி என்னை தெரிந்தெடுத்த தெய்வமாகிய என் இயேசு கிறிஸ்துவிடம் கெஞ்சி மன்றாடினேன்.

கர்த்தரிடம் கண்ணீர் விட்டுக் கதறினேன்

கர்த்தாவே, 1964 ஆம் வருடம் முதல் உம்முடைய ஊழியத்துக்காக என் தொழிலில் அதிக பணம் சம்பாதிக்கும் எண்ணம் இல்லாமல் உம்முடைய ஊழியத்துக்காக அதிக நாட்களை ஒதுக்கினேன்! பல மலைகளில் ஏறி காட்டுக்குள் தங்கி நான் செய்த அந்த கடின ஊழியத்தை நினைத்தருளும். என் கூட்டத்தில் எத்தனையோ ஆயிரம் மக்கள் இரட்சிக்கப்பட்டார்களே! எத்தனையோ ஆயிரம் பேர் சுகம் பெற்றார்களே! அவைகளை நினைத்துப் பார்த்தாவது என் மனைவியைக் காப்பாற்ற மாட்டீரா? என்று அழுதேன். நான் என் மனைவியை இப்போது மரிக்க கொடுத்தால், என் இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு எப்படி நான் உம் ஊழியத்தை செய்வேன்?

கர்த்தர் கழிவறையில் பிரசன்னமானார்

என் வாழ்க்கையில் ஏதாவது தவறு செய்து இருந்தால் அல்லது உம் மனதை வேதனைப்படுத்தும் விஷயம் ஏதாவது இருந்தால் தயவு செய்து கூறும், ஆண்டவரே! நான் அதைச் சரிப்படுத்துவேன். இந்த ஒரு விசை என் மனைவியின் உயிரைப் பிச்சையாகவே கேட்கிறேன். மனம் இரங்குவீராக என்று கதறி அழுதேன். அப்போது அந்த நாற்றம் எடுத்த கழிவறையில் பரிசுத்த தேவனின் பிரசன்னத்தை உணர்ந்தேன். என் கர்த்தர் மனிதக் கழிவுகளின் நாற்றத்தை பார்க்கவில்லை. ஆனால் என் இருதயத்தின் ஆழத்தைப் பார்த்தார். என் கதறுதலைக் கண்டார்.

உடனே கர்த்தர் என்னோடு இடைப்பட்டார். மகனே! முதலாவது உன் இருதயத்தில் உள்ள பெருமையை, அகம்பாவத்தை, கர்வத்தை உன்னிலிருந்து நீக்கிப் போடு என்றார்.

ஆயிரக்கணக்கான மக்கள் உன் கூட்டத்தில் இரட்சிக்கப்பட்டது, மனம் திரும்பியது, உன் பிரசங்கத்தால் தான் என்றா எண்ணுகிறாய்? அந்தப் பெருமையை முதலில் உன் உள்ளத்திலிருந்து நீக்கிப் போடு. மக்கள் இரட்சிக்கப்பட்டது என் வசனத்தால்தான். நீ பிரசங்கத்தில் உபயோகித்தது என் வசனம் ஆகும். மக்கள் என் வசனத்தைக் கேட்டார்கள். எச்சரிப்பை உணர்ந்தார்கள்! மனந்திரும்பி என்னை நோக்கி அழுதார்கள்! நான் அவர்களை இரட்சித்தேன். என் வசனம் அவர்களில் கிரியை செய்தது. என் வசனம் கிரியை செய்யாமல்

ஒரு நாளும் என்னிடம் அது திரும்பி வராது என்று உனக்குத் தெரியாதா?

உன் ஜெபத்தினாலா ஜனங்கள் சுகம் ஆனார்கள்?

ஆயிரக்கணக்கான மக்கள் சுகமானார்கள் என்றாயே! உன் ஜெபத்தில் தான் அவர்கள் சுகம் பெற்றார்கள் என்றா நினைக்கிறாய்? ஒரு கூட்ட மக்கள் மனந் திரும்பி என் வசனத்துக்கு கீழ்ப்படிந்தார்கள். நான் அவர்களை சுகமாக்கினேன். (சங். 107:20) 'அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களை சுகமாக்கினார்'. இவர்கள் பெற்ற சுகத்துக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? இந்த பெருமையை பாவத்தை உன்னிலிருந்து நீக்கிப் போடு. உனக்குள் உள்ள கர்வத்தை நீக்கிப் போடு என்று வரிசையாக கர்த்தர் எனக்கு உணர்த்த, உணர்த்த என் குறைகள் யாவும் எனக்குப் புரிந்தது.

என் தவறுதலுக்காக அழுதேன்

ஆண்டவரே! நான் வெறும் கருவி மட்டுமே! என்பதை உணர்ந்து கொண்டேன். மக்கள் இரட்சிக்கப்பட்டதும், சுகம் பெற்றதும் உம் வசனத்தால் அன்றி, என் பிரசங்கத்தாலோ, என் ஜெபத்தாலோ அல்ல என்பதை ஒத்துக் கொள்கிறேன். அறிக்கையிடுகிறேன். நானே ஊழியர்களின் கூட்டத்தில் ஊழியர்களுக்கு பெருமை இருக்கக் கூடாது. அகம்பாவம் இருக்கக் கூடாது என்று பிரசங்கித்தேன். ஆனால் அந்தப் பெருமை, அகம்பாவம் யாவும் எனக்குள்ளேயே மறைமுகமாக இருப்பதை உணர்த்தினீரே! நன்றி! உணர்ந்து கொண்டேன். ஆண்டவரே! ஒத்துக் கொள்கிறேன் ஆண்டவரே! இனி எல்லாத் துதியும் கனமும், மகிமையும், உமக்கே உரியது! இந்த ஒரே ஒருமுறை என்னை மன்னித்து எனக்கு ஒரு சான்ஸ் தாரும். என் மனைவியை வாழ வையும் என்று கெஞ்சினேன்.

கர்த்தர் என் மனந் திரும்புதலைக் கண்டார்

அப்போது சிலர் என் கழிவறைக் கதவைத் தட்டி டாக்டர் உங்கள் மனைவி பிழைத்துக் கொண்டார். நாடித் துடிப்பு பெலப்பட தொடங்கி விட்டது. நாடி எண்ணிக்கை கூட ஆரம்பித்து விட்டது. உங்களை டாக்டர்கள் அழைக்கிறார்கள் வாருங்கள் என்றார்கள். உடனே ஆண்டவரிடம் நன்றி கர்த்தாவே, என் ஜெபத்தை, என் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டீரே! நன்றி ராஜா! இதோடு என் ஜெபத்தை முடிக்கிறேன்! திரும்பி வந்து மறுபடியும் உம்மிடம்

பேசுவேன்! என்று கூறி ஜெபத்தை நிறுத்தி கதவைத் திறந்து என் மனைவியின் அறைக்கு ஓடினேன்.

கர்த்தர் என் மனைவியை உயிர்ப்பித்தார்

எல்லா டாக்டர்களும் சூழ்ந்து நின்றிருந்தார்கள். நான் என் மனைவியின் கால் அருகே நின்றேன். என் மனைவியின் மரணப் படுக்கைக்கு காரணம் நான் தான் என்பது எனக்கும், என் ஆண்டவருக்கும் மட்டுமே தெரியும். சற்று நேரத்துக்கு முன்தான் என் மனைவியின் மரணப் படுக்கையின் காரணத்தை கர்த்தருக்கு முன்பாக நான் சரிப்படுத்தினேன். நிச்சயம் என் மனைவி உயிர் பிழைத்து விடுவார்! சில நிமிடங்களுக்குப் பிறகு என் மனைவி கண்களைத் திறந்தார். என் மனைவியின் கண்களின் கருவிழிகள் மட்டும் கூட்டத்தைச் சுழன்று நோக்கின. கால் அருகே நிற்கும் என்னைக் கண்டார். தன் அருகே வரும்படி கண்கள் மூலமாக சைகை காட்டினார். எல்லாரையும் விலக்கி அவர் அருகே சென்றேன். ஏதோ சொல்ல முயல்கிறார் என்பதை உணர்ந்தேன். அவர் வாயருகே என் காதை கொடுத்துக் கேட்டேன்.

நல்லதொரு மனைவி கிடைக்கிறவன் பாக்கியவான்!

அப்போது அவர் கூறினார்! நாளை நீங்கள் மதுரை கன்வென் ஷனுக்குப் போக வேண்டுமே, ஞாபகமிருக்கிறதா? இங்கு என்ன செய்கிறீர்கள் என்றார். என் ஆண்டவரை மனதார துதித்தேன். தான் படுத்திருக்கும் நிலை, மரணப் படுக்கை என்று அவர் அறிந்தும் என் ஊழியத்தை எனக்கு ஞாபகப்படுத்திய அவரின் பொறுப்பு எனக்குக் கிடைத்த ஆவிக்குரிய மனைவிக்காக ஆண்டவரை துதிக்க வைத்தது. ஒருவனுக்கு இரட்சிக்கப்பட்ட மனைவி கிடைக்கும் பாக்கியம் வாழ்க்கையில் மிகவும் உயர்ந்தது. அந்த வகையில் நான் பாக்கியசாலி என்று கூறுவதில் நான் பெருமையடைகிறேன்.

இரண்டு நாட்களில் பூரண சுகம் பெற்று ஆஸ்பத்திரியில் இருந்து என் மனைவியை வீட்டுக்கு அழைத்து வந்தேன்.

சிட்சையின் ஆயுதத்தால் சீர்ப்பட்டேன்

அன்பான வாசகர்களே! ஊழியர்களே! 1964 ஆம் வருடம் நான் மனந்திரும்பி இரட்சிப்பை பெற்று ஊழியக்காரனாக பல வருடம்

ஊழியம் செய்து கொண்டிருந்த என்னைச் சரிப்படுத்தவும் என் குற்றத்தை எனக்கு உணர்த்தவும் என் ஆண்டவர் தன் கையில் எடுத்த தன் இரண்டாம் ஆயுதத்தைக் கண்டீர்களா?

கிருபையின் வரமே என்னைக் காத்தது

1964 ஆம் வருடத்துக்கு முன் நான் இந்திய ராணுவத்திலிருந்த போதும் அதற்கு முன்பும் நான் தெரிந்தே பல வித பாவம் செய்தபோது எனக்கு இவ்வளவு பெரிய தண்டனை இல்லை. பாவம் செய்ய ஒரு வேனில் பயணம் செய்தபோது வேனின் பின் சக்கரம் (ஆக்ஸல்) முறிந்து சக்கரம் தனியாக கழன்று ஓட வேன் கவிழ்ந்தது. கதவு அருகே முன் புறம் அமர்ந்திருந்த கிளீனர் பையன் மரித்தான். வாகனத்தை ஓட்டிய டிரைவரின் காது கிழிந்தது. ஆனால் நடுவில் அமர்ந்திருந்த எனக்கோ ஒரு சிறு கீரலும் இல்லாமல் வாகனத்தின் முன் உள்ள கண்ணாடியை என் காலால் எட்டி உதைத்து அதை உடைத்து வெளியே வந்தேன். ஒரு சிராய்ப்புக் கூட இல்லாமல் முழுமையாக காப்பாற்றப்பட்டேன். அப்போதெல்லாம் இத்தனை பெரிய தண்டனையான இரண்டாம் ஆயுதத்தை தேவன் எனக்கு எதிராக உபயோகிக்கவில்லையே? ஏன்? பல ஆண்டுகள் இந்தக் கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை. நானும் அதைப் பெரிதாக நினைக்கவுமில்லை.

திருவசனத்தை போதிப்பவன் ஒரு முன்மாதிரியாக இருக்கணும்!

ஆனால் மனந்திரும்பி ஊழியக்காரராக கர்த்தரால் உபயோகப் படுத்தப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் ஒரு சாதாரண பெருமை, அகம்பாவம், கர்வத்தை உணர்த்த என் மனைவியின் மரணப்படுக்கை என்ற ஆயுதத்தைக் கர்த்தர் உபயோகித்தார்! இது என்னை மிகவும் ஆழமாக யோசிக்க வைத்தது.

வேதம் கூறுகிறது: **'அறிந்திருந்தும் தவறு செய்கிறவன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்'** ஆம். வெள்ளைத் துணியில் ஒரு துளி மை ஒட்டிக் கொண்டால் பளிச்சென்று அந்தக் கறை தெரியும். கருப்புத் துணியில் எத்தனை கறை பட்டாலும் அது நம் கண்களுக்கு தெரியாது. அதைப்போல் கர்த்தருடைய பார்வை மிகவும் வித்தியாசமானது. நாம் மனந்திரும்பி கர்த்தரின் பணியை செய்து மற்றவர்களுக்கு ஆலோசனை கூறும் அளவு உயர்ந்த நிலையை அடையும்போது ஒரு சிறு தவறுகளும் குற்றங்களும்

ஆண்டவரின் பார்வையில் மிகப் பெரிதாக தோன்றும். அதனால்தான் வெளிப்படுத்தின விசேஷத்தில் கர்த்தர் கூறுகிறார்.

நான் பரிசுத்தர் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்!

'**பரிசுத்தமாக இருப்பவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்!**' என்று நம் வேதத்தின் கடைசி புத்தகத்தின் கடைசி அத்தியாயத்தில் கர்த்தர் தன் வேதத்தை முழுவதும் எழுதி முடிக்கும்போது கடைசி வரியாக ஆவியானவர் மூலம் அந்த வார்த்தையை எழுதி முடிக்கிறார். – வெளி 22:11.

அன்பானவர்களே, ஊழியக்காரனாகிய என் வாழ்க்கையில் இத்தனை வருடங்கள் கழித்து என்னை குற்றமற்றவனாக்க சுத்தமான தங்கமாக மாற்ற நெருப்பிலிட்டு தங்கத்தை புடமிடுவதைப் போல் என்னைத் திருத்த என் மனைவியை ஆயுதமாக உபயோகித்தாரே! இதை வாசிக்கிற உங்களில் யாராவது இன்னும் மனந் திரும்பாமல் போனால் தனியே சென்று பாவத்துக்கு மனம் வருந்தி கர்த்தரிடம் அறிக்கை இடுங்கள். அந்த நிமிடமே தன் இரத்தத்தால் உங்களைக் கழுவி சுத்திகரித்து உங்களை கர்த்தரைப் போல் மாற்றுவார். அவர் அதைத்தான் விரும்புகிறார். '**நான் பரிசுத்தராக இருப்பதுபோல் நீங்களும் பரிசுத்தமாயிருக்க விரும்புகிறேன்**' என்றார்.

'**கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டு வந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?**' – 2 சாமுவேல் 7:18 என்று நாம் ஒவ்வொருவரும் நம்மை தாழ்த்தி தேவ சமூகத்தில் ஒப்புக் கொடுப்போம். கர்த்தர் அப்போது எப்போதும் கருணையோடு இருப்பார். கர்த்தர் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிக்கவே விரும்புகிறார்.

பரலோகம் போக மனந்திரும்புங்கள்

உலகில் எந்த மதத்திலும் அவர்கள் வணங்கும் எந்தத் தெய்வமும் நான் பரிசுத்தர் என்ற வார்த்தையை வேதங்களிலோ, புராணங்களிலோ குறிப்பிட்டதாகவோ எழுதியதாகவோ யாராலும் கூற முடியாது. நம் தேவன் பரிசுத்தர். ஆகவே தான் நம்மையும் பரிசுத்தமான வாழ்க்கை வாழ அழைக்கிறார். பிஷப்பாக, மாடரேட்டராக, கன்வென்ஷன் பிரசங்கியாக இருந்தாலும், எத்தனை லட்சங்கள் ஊழியத்துக்கு காணிக்கை கொடுத்திருந்தாலும், மிஷனரி பணி தளத்தில் எத்தனை ஆலயங்கள் கட்டியிருந்தாலும்

நீங்கள் மனந்திரும்பாமல் போனால் நிச்சயம் பரலோகம் போக முடியாது.

பாவம் செய்து கொண்டே ஊழியம் செய்ய முடியும்.

பாவம் செய்து கொண்டும், வசனத்தின் படி ஊழியம் செய்யாமலும், தீர்க்கதரிசனம் கூற முடியும். ஜெபத்தில் பொய்யாய் பெயர்களை கர்த்தர் காட்டியதாக அறிவிக்க முடியும். அது சரியானதாக மேடையில் மக்கள் முன் காணப்படவும் முடியும். பொய்யாய் பேசும் நீங்கள் ஜெபிக்கும்போது பிசாசு ஓடும். அற்புதங்கள் உங்கள் கூட்டத்தில் நடக்கும். ஆனால் 'இயேசுவோ உங்களை நான் அறியேன்' என்பார். உங்களை 'அக்கிரம செய்கைக்காரர்' என்று அழைப்பார். அதாவது கிரமமற்ற முறையில் வசன அடிப்படையில் அல்லாது எத்தனை அற்புதங்கள் உங்கள் ஊழியத்தில் காணப்பட்டதாக நீங்கள் சாட்சிகள் எழுதினாலும் உங்களை 'அக்கிரம செய்கைக்காரர்' என்றுதான் அழைப்பார். ஆவியானவரின் பெயரை உபயோகித்து பாஷையே அல்லாத ஒன்றை பாஷை என்றும், அக்கினி என்றும், அக்கினி அபிஷேகம் என்றும், கவர்ச்சி வார்த்தைகளை உபயோகித்து மக்களை ஏமாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும், பாஸ்டர்களுக்கும் நான் கூறிக் கொள்ள விரும்புவது இதுதான். உங்களை திருத்திக் கொள்ளுங்கள். உங்கள் தவறான தரிசனங்களை புரிந்து கொள்ளுங்கள். பரலோகம் போகிறேன், நரகம் போய் வந்தேன் என்றெல்லாம் நீங்கள் கூறும் பொய்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வையுங்கள். நானும் உங்களைப் போன்ற ஊழியக்காரன் தான். கர்த்தர் என்னைச் சரிப்படுத்த உபயோகித்த இரண்டாம் ஆயுதம் உங்கள் வாழ்க்கையில் உபயோகிக்கும் வரை காத்திருக்க வேண்டாம். காலிழந்து, கையிழந்து, கண் இழந்து, பிள்ளையை பறி கொடுத்து மனைவி அல்லது புருஷன் அல்லது பெற்றோர் இறந்து போன பின் நீங்கள் மனந்திரும்பி என்ன பயன்?

கர்த்தரின் நாமத்தை வீணில் வழங்காதிருப்பாயாக!

'நீ சுகமாய் வாழ்ந்திருக்கையில் நான் உனக்குச் சொன்னேன். நீ கேளேன் என்றாய். உன் சிறு வயது முதலே நீ என் சத்தத்தைக் கேளாமல் போவதே உன் வழக்கம்' - எரே 22:21 என்று கர்த்தர் உங்களைப் பார்த்துக் கூறுவார்.

'நீ யாருக்கு அஞ்சி பயப்படுகிறாய்! நீ பொய் சொல்லுகிறாய்!' என்று கர்த்தர் ஏசா 57:11இல் கூறுகிறார். அந்நிய பாஷையில், பொய் தரிசனத்தில், பொய் சாட்சிகளில் பொய் ஜாக்கிரதை! மறுபடியும் உங்களை எச்சரிக்கிறேன்.

கடைசியாக கர்த்தர் கூறுவதைக் கவனியுங்கள்!

'நான் வெகுகாலம் ம்வுனமாயிருந்தேன் அல்லவா, ஆகையால், நீ எனக்கு பயப்படாதிருக்கிறாய்' – ஏசா 57:11. வெகு காலம் மவுனமாயிருந்தேன். பயப்படாதிருக்கிறாய் என்ற வார்த்தைகளை கவனியுங்கள். ஆவியானவர் மனிதனோடு . எப்போதும் போராடுவதில்லை என்று வேதம் கூறுகிறது.

இன்றே இரட்சண்ய நாள், மனந்திரும்பு

ஆகவே இதை வாசிக்கும் நீங்கள் யாராயிருந்தாலும் மரிப்பதற்கு முன் மனந்திரும்புங்கள். மரித்த பின் மனம் திரும்ப வழியேயில்லை. இப்போது நீங்கள் உயிரோடு இருந்து இதை வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்போதே மனந்திரும்பி விடுங்கள். என் மனைவியின் மரணப் படுக்கை மூலமாக என்னை கர்த்தர் திருத்த முயற்சித்ததைப் போல் உங்கள் மனைவி மூலமாக, உங்கள் பிள்ளையின் மரணப் படுக்கையின் மூலமாக, உங்கள் கணவரின் மரணப் படுக்கை மூலமாக உங்களை உணர்த்தும் நிலை உருவாக வேண்டாம். உங்கள் தொழில் பாதிக்கப்பட்ட பின் பெரும் கடன் காரர்கள் உங்களை சூழ்ந்து கொண்டபின், கர்த்தரை தேட முயல வேண்டாம்! அதுவரை காத்திருக்க வேண்டாம். இன்றே இரட்சண்ய நாள்.

கர்த்தரின் இரண்டாம் ஆயுதத்திற்கு தப்புங்கள்

உங்கள் மதுபான குடியை இன்றோடு நிறுத்திக் கொள்ளுங்கள். **'ஒருவன் மறுபடியும் பிறவா விட்டால், அவன் தேவனுடைய இராஜ்யத்தை காண மாட்டான்'** – யோ 3:3. இதை வாசிக்கிற உங்கள் யாவருக்காகவும் ஜெபிக்கிறேன். கர்த்தரின் இரண்டாம் ஆயுதம் உங்கள் மேல் உபயோகிக்காமல் இருக்க ஜெபியுங்கள். **'கர்த்தரை கண்டடையத் தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்'** அவர் சமீபமாயிருக்கும் போதே அவரை நோக்கி கூப்பிடுங்கள்! தேவனின் இரண்டாம் ஆயுதம்! ஜாக்கிரதை!

என் வாலிபப் பருவம்

நான் உயர் நிலைப் பள்ளியில் 6 ஆம் வகுப்பு படித்துக் கொண்டி ருந்தேன். என்னோடு நெருங்கிப் பழகும் இரண்டு நண்பர்கள் உண்டு. ஒருவன் காரியத்துக்காகப் பழகுவான். மற்றவன் என் பாட்டுக்காகவும், நான் செய்யும் தமாஷை, சேட்டையை ரசிக்கப் பழகுவான். பழகும் நோக்கம் எப்படியிருந்தாலும் இரண்டு பேரும் என்னோடு நெருங்கிப் பழகுவார்கள். மேலும் நாங்கள் மூவரும் ஒரே இடத்திலிருந்து சென்று பயின்று, தினமும் ரயிலில் ஏறி வீடு திரும்புவோம்.

இவர்கள் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. காரணம் இவர்களின் குடும்பத்தினர் இதை வாசிக்க நேர்ந்தால் மனம் வேதனைப்படுவார்கள்.

சினிமா மோகம் என்னை வாட்டி வதைத்தது

இந்த இரண்டு சிநேகிதர்களில் ஒருவன் சிறு வயதிலிருந்தே உலக சந்தோஷமே நோக்கமாக அலைவான். 6 ஆம் வகுப்பு படிக்கும் போதே வகுப்புக்கு மட்டம் போட்டு மேட்னி சினிமா பார்ப்பான். அவன் என்னையும் மற்ற நண்பனையும் சினிமாவுக்கு அழைப்பான். என்னுடைய மற்றொரு நண்பன் பெற்றோருக்குப் பயந்தவன். நானும் அப்படித்தான். சில காலம் பெற்றோருக்குப் பயந்திருந்தேன். என் மற்ற நண்பனின் சகவாசத்தால் சில நல்ல காரியங்களை அவனிடமிருந்து படித்தேன். ஆனால் அதேசமயம் இவனோ என்னுடைய கிண்டல், பகடி, சேட்டை, தமாஷ் இவைகளை ஓரளவுக்குத்தான் ரசிப்பான். ஆனால் சினிமா போகும் நண்பனோ என் தமாஷ்களை மிகவும் ரசிப்பான். நான் சினிமாப் பாடல் பாடுவதை ஊக்குவிப்பான். அப்போது என் வீட்டில் ரேடியோ இல்லை. என் வீட்டுக்கு அருகில் உள்ள ஒருவரின் வீட்டுக்குச் சென்று தினமும் மாலை 6.30 மணி வரை சினிமாப் பாட்டு கேட்பேன். சினிமா பார்க்காமலேயே ஒவ்வொரு சினிமாப் பாட்டுக்களையும் அப்படியே பாடுவேன். என் வீட்டில் சினிமா பார்க்க என் பெற்றோர் என்னை அனுமதிப்பது இல்லை. சினிமாவுக்குப் பணம் செலவழிக்கும் அளவுக்குக் கூட பண வசதி இல்லாத ஏழ்மை என் வீட்டில் அன்று

இருந்தது. இந்தச் சினிமா நண்பன், நான் பாடும் பாடல் சினிமாவில் எந்தக் கட்டத்தில் பாடப்படுகிறது என்பதை கவர்ச்சியாக விவரிப்பான். அவன் விவரிக்க விவரிக்க எனக்குள்ளே சினிமா பார்க்க வேண்டும் என்ற வாஞ்சை அதிகமாகத் தொடங்கியது. ஒருபக்கம் பெற்றோரின் கட்டுப்பாடு, மற்றொரு பக்கம் என் சினிமா மோகம் இவற்றுடன் மிகவும் போராடிக் கொண்டிருந்தேன். 8 ஆம் வகுப்பு வரை அந்தப் போராட்டம் வெற்றி பெறாமல் இருந்தது.

திருட்டுத்தனமாக சினிமாவுக்கு செல்ல அழைக்கப்பட்டேன்

9 ஆம் வகுப்பு பிரவேசித்த போது ஒரு நாள் ஏதோ சூழ்நிலையில் மதியம் எதிர்பாராமல் பள்ளி விடுமுறை விட்டனர். இது என் வீட்டுக்குத் தெரியாது. இப்போது பிசாசு என் சினிமா நண்பனின் வழியாகப் புதிய பயங்கர வழிக்கு செல்ல ஆரம்ப அடிக்கல் நாட்டினான். மதியம் விடுமுறை என்பது வீட்டுக்குத் தெரியாது. கூட இருந்த மற்ற நண்பனும் இல்லை. ஏன் நீ இன்று சினிமா பார்க்க என்னுடன் வரக் கூடாது? நீ வகுப்புக்கு மட்டம் போடவில்லை. மட்டம் போட்டு சினிமா பார்க்க வந்தால்தான் தவறு. இப்போது விடுமுறையாயிற்றே. மேலும் சினிமா முடியும் நேரம் நாம் வழக்கமாக வீடு சேரும் நேரம். ஆகவே யாருமே நம் தவறைக் கண்டுபிடிக்க முடியாது. அப்படித்தான் தாமதமானாலும் ரயில் தாமதமானது என்று பொய் சொல்லிக் கொள்ளலாம். இப்படி என்னை மற்றவன் உற்சாகப்படுத்தினான். எனக்கு வியர்க்கத் தொடங்கியது. மனதில் ஒரே போராட்டம். மாட்டேன் என்று கூற தைரியப்படாதவனாக பிரியமில்லாமல், என்னிடம் பணம் இல்லையே என்று கூறினேன். பணம் நான் தருகிறேன். நீ என்னோடு வந்தால் போதும் என்றான். பிசாசு எப்படி ஞானமாக வலை விரித்தான் பார்த்தீர்களா?

கியூவில் நிற்காமல் சுவர் ஏறி டிக்கெட் எடுத்தேன்

எனக்குப் பயம் பிடித்து விட்டது. என்னை நம்பி பள்ளிக் கூடத்துக்கு அனுப்பிய என் பெற்றோருக்கு நான் துரோகம் செய்வது போல் உணர்ந்தேன் வேண்டாம்டா எனக்குப் பயமாக இருக்கிறது என்றேன். முதலில் பயமாகத்தான் இருக்கும். இதில் ஒன்றுமில்லை. நீ பேசாமல் வா என்று என் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு போனான். சினிமா தியேட்டரின் வாசலில்

பெரிய கூட்டம். எல்லோரின் முகங்களும் என் ஆசிரியர்கள் போலவும், என் பெற்றோர் போலவும் எனக்குக் காட்சியளித்தன. டேய் என் பெற்றோர் அங்கு நிற்பது போல் இருக்கிறது என்றேன். அப்படியென்றால் உன் பெற்றோர் உனக்குத் துணையாக சினிமாவுக்கு வந்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளேன் என்றான். அனா டிக்கெட் கியூவில் இரண்டு சுவர்களைப் பிளந்து விடுவதுபோல் ஜனங்கள் நெருக்கித் தள்ளிக் கொண்டிருந்தார்கள். நண்பனோ நல்ல அனுபவசாலி. கியூ நிற்கும் தூரத்தைப் பார்த்தால் நிச்சயம் நமக்கு டிக்கெட் கிடைக்காது என்று அறிந்து, சுவரில் உள்ள சின்ன பள்ளங்களில் கால் வைத்து சுவரின் மீது ஏறிக் காட்டினான். பிறகு என்னை ஏறச் சொன்னான்.

முன் எச்சரிக்கையாக என் டிக்கட்டுக்கு உரிய பணத்தை என்னிடம் கொடுத்து ஏறும்படி தூண்டினான். நான் தயங்குவதைக் கண்ட அவனுக்கு இப்போது கோபம் வந்தது. உனக்குக் காசும் கொடுத்து உன்னைக் கெஞ்ச வேண்டியிருக்கிறதே என்று கத்தினான். பிறகு அவனே என்னைப் பிடித்து தூக்கி விட்டான். இப்போது சுவர் மேல் உட்கார்ந்து கொண்டேன். ஆனால் இரண்டு சுவர்களுக்கு மத்தியில் கீழே வெறும் தலைகளாக இருக்கக் கண்டேன். தலைகளின் மேல் எப்படி கால் வைத்து இறங்குவது? அதற்குள் என் நண்பனும் சுவர் மீது ஏறிவிட்டான். ஏறியவுடன் ஒரே தள்ளு என்னைப் பிடித்துத் தள்ளி விட்டான். தொபீர் என்று கீழே கியூவில் நின்று கொண்டிருந்த பல தலைகளின் மேல் விழுந்தேன். அடிடா. உதைடா என்று பல குரல்கள் கேட்டன. அதற்குள் என் உடல் தானாக இரண்டு பேர்களுக்கு மத்தியில் சொருகி நின்றது. அதற்குள் திரும்பவும் அடி. உதை என்ற சத்தம். ஓ.. என் நண்பனும் குதித்து விட்டான் என்பதை அறிந்தேன்.

சினிமா பார்த்த பிறகு பயம்

பிறகு அவன் என் பெயரைக் கூப்பிட்டது பள்ளிக் கூடத்தில் அட்டெண்டன்ஸ் எடுப்பது போல் இருந்தது. நானோ ரகசியமாக வந்திருக்கிறேன். ஆனால் இவனோ ஏன் இப்படி என் பெயரைக் கூறிக் கத்துகிறான் என்று கோபம் கோபமாக வந்தது. டிக்கெட் கொடுக்குமிடம் வந்தது. அப்போது தான் பத்துக் காசு குதித்த வேகத்தில் எங்கோ தொலைந்து விட்டதை அறிந்தேன். நண்பன்

வரும்வரை காத்திருந்தேன். மறுபடியும் 10 காசு கொடுத்து உதவி னான். இருவரும் அடுத்தடுத்து உட்கார்ந்து சினிமா பார்த்தோம். ஆனால் என் மனமோ சினிமாவை ரசிக்க முடியவில்லை. ஒரு வழியாக சினிமா முடிந்து வீடு வந்து சேர்ந்தோம். வீட்டில் நுழைய பயமாக இருந்தது. நல்லவேளை யாரும் ஏன் லேட் என்று என்னைக் கேட்கவில்லை.

பயம் தெளிந்தது; சினிமா பார்க்க திருடினேன்

முதல் திருட்டு சினிமா பார்த்ததால் எந்தப் பிரச்சனையும் எழவில்லை என்று அறிந்ததும் எனக்குள் தைரியம் வந்தது. இரண்டு மாதங்கள் கழித்து மறுபடியும் ஒரு சினிமா பார்க்க போனோம். இப்படி அடுத்தடுத்து சினிமா மோகத்தில் மூழ்கினேன். என் நண்பனுக்கு நான் நன்றியுடையவனாய் அவனுக்கு அடிமையானேன். இப்போது என்னுடைய மற்ற நல்ல நண்பனை நானே ஒதுக்கினேன். இப்போது ரயிலில் நாங்கள் சேர்ந்து உட்காருவதில்லை. அதிகம் அவனோடு நெருங்கினால் பல கேள்விகளைக் கேட்பான் என்ற குற்ற உணர்வில் அவனை விட்டு நீங்கினேன். என் சினிமா நண்பனே எப்போதும் எனக்குப் பணம் செலவழித்தால் எப்படி? நானும் என்றாவது அவனுக்காகவும், எனக்காகவும் பணம் செலவழிக்க வேண்டுமே. என்ன செய்வது? என்ற புது எண்ணம் உண்டானது. இப்போதுதான் எனக்குள் திருடும் எண்ணம் புகுந்தது. கடைக்கு சாமான் வாங்கும்போது, நோட்டுப் புத்தகம் வாங்க பணம் கிடைக்கும்போது இப்படிப் பல வகைகளில் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் திருட ஆரம்பித்தேன். ஆக இந்த என் திருட்டு நடவடிக்கைகளுக்குப் பரிசாக அந்த வருடம் 9 ஆம் வகுப்பில் பெயில் ஆனேன். சினிமா மோகம் கூடியதால் அந்த ஆண்டு பெயில் ஆவேன் என்று முன்பே எனக்குப் புரிந்தது. அப்படியே பெயிலும் ஆனேன். 9 ஆம் வகுப்பில் பெயில் ஆனதாலும் பள்ளியில் மிகவும் பிரச்சினைக்குரியவனாக இருந்ததாலும் பள்ளியை விட்டு நீக்கப்பட்டேன். என் உறவினர் ஒருவரின் சிபாரிசால் திருவண்ணாமலை என்ற ஊரில் ஹாஸ்டலில் சேர்க்கப்பட்டேன். என் சினிமா நண்பனும் நானும் பிரிக்கப்பட்டோம்.

என் நண்பனுக்கு ஜோசியம், கைரேகையிலும் நம்பிக்கை

என் நண்பனுக்கு மற்றொரு கெட்ட பழக்கம் உண்டு. ஜோசியம், கைரேகை, மோடி வித்தை ஆகியவைகளைப் பார்ப்பது அவன்

வழக்கம். ஒருமுறை பெரிய கைரேகை புரொபசர் சேலத்தில் ஒரு லாட்ஜில் தங்கி இருப்பதாக அறிந்து அவரிடம் 30 ரூபாய் கொடுத்து ஒரு நோட்டில் கைரேகையின் பலன், விவரம் எழுதி வாங்கிக் கொண்டான். அப்படியே மற்றொரு நாள் பெரிய ஜாதகம் கணிக்கும் ஜோசியர் சேலம் வந்த விவரமறிந்து ஒரு பெரும் தொகை கொடுத்து தன் நட்சத்திரத்தைக் கூறி ஜோசிய விபரம் எழுதி வாங்கினான். (அவன் ஒரு கிறிஸ்தவன்தான் என்றாலும் அவன் தகப்பனார் ஒவ்வொரு பிள்ளைகள் பிறந்த உடன் நேரம், நட்சத்திரம் இவைகளை ஒரு நோட்டில் குறித்து வைப்பது வழக்கம். அதனால்தான் அவன் தன் நட்சத்திரத்தைக் கூற முடிந்தது) நட்சத்திரத்தைப் பற்றிய ஜோசியம் கணித்து ஜோசியர் கொடுத்த நோட்டு அவன் கையில் கிடைத்ததிலிருந்து அவன் சந்தோஷமாக இல்லை. காரணம் கேட்டபோது தன் ஆயுளைக் குறித்த விஷயத்தில் கைரேகையும், நட்சத்திரமும் வித்தியாசமாக காண்பிக்கிறது என்றான். கைரேகையில் இவன் ஆயுள் 87 வரை நீண்டிருக்கும் என்று கூறுகிறது. ஆனால் நட்சத்திரம் 80 வயது வரைதான் இவன் ஆயுள் இருக்கும் என்று கணக்குக் காட்டுவதாகக் கூறி கவலைப்பட்டான். நான் கூறினேன். 7 வயது தானே வித்தியாசப்படுகிறது. மேலும் இப்போது இந்தச் சின்ன வயதில் அதற்காக ஏன் கவலைப்படுகிறாய் என்றேன். இல்லை அப்படி வித்தியாசம் வரக் கூடாது என்று மீண்டும் கவலைப்பட்டான்.

நான் டாக்டராகி இரட்சிக்கப்பட்டேன்

என் சினிமா நண்பன் என்ஜினியர் பட்டம் பெற்றான். பம்பாயில் உயர்ந்த கம்பெனியில் நிறைய சம்பளத்தில் வேலை கிடைத்தது. நானும் வைத்தியத் துறையில் பட்டம் பெற்று டாக்டரானேன். இப்படி நாங்கள் பல விதத்திலும் வித்தியாசமான சூழ்நிலையில் வாலிப வாழ்க்கையை ஆரம்பித்தோம். இப்போது நான் சம்பாதிக்கும் கட்டத்தில் என் ஆரம்ப வாழ்க்கையிலேயே என்னைக் கர்த்தர் சந்தித்தார். நான் ராணுவத்திலிருந்து வெளி வந்தவுடன் டாக்டராக ஒரு கிராம ஆஸ்பத்திரியில் பணியாற்றினேன். டேனிஷ்மிஷனின் கிறிஸ்தவ ஸ்தாபனமான பெத்தேலில் டாக்டராக பணி செய்யும் பாக்கியம் பெற்றேன். ஆம், அது ஒரு பாக்கியமாகும். காரணம் அங்கு தான் கர்த்தர் என்னைச் சந்தித்தார். இரட்சித்தார். ஒருவேளை அங்கு செல்லாமலிருந்தால் என் வாழ்க்கை எப்படி

யெல்லாம் உலகத்தோடு அழிந்து கெட்டுப் போயிருக்குமோ, சரியான வேளையில் சரியான இடத்துக்குக் கொண்டு சேர்த்த கர்த்தருக்கு கோடானுகோடி ஸ்தோத்திரம். அதன்பின் சேலம் அருகில் உள்ள டேனிஷ்பேட்டை என்ற கிராமத்துக்கு அருகே காடயாம்பட்டி என்ற ஊரில் சொந்த ஆஸ்பத்திரி ஆரம்பித்தேன். நான் இரட்சிக்கப்பட்டு புது மனிதனாக மாற்றப்பட்டது 1964ஆம் வருடம் மார்ச் மாதம் என்று நினைக்கிறேன்.

என் நண்பர்களுக்கெல்லாம் சுவிசேஷம் அறிவிக்க வாஞ்சை

நான் இரட்சிக்கப்பட்டவுடன் என் முதல் பாரம் என்னோடு சேர்ந்து பாவத்தில் ஈடுபட்ட என் நண்பர்கள் எல்லாருக்கும் என்னில் ஏற்பட்ட மாற்றத்தையும் இரட்சிப்பைப் பற்றியும் கூற வேண்டும் என்பதாகும். இந்த பாரம் என்னை வெகுவாக அழுத்த என் நண்பர்கள் எங்கெல்லாம் சிதறியிருக்கிறார்களோ அங்கெல்லாம் சென்று பஸ் பிரயாணம் செய்தும், நேரில் அவர்களைக் கண்டுபிடித்து வலுக்கட்டாயமாக இரட்சிப்பைக் கூறி வருவேன். நேரில் காண முடியாதவர்களின் விலாசங்களை கேட்டு வாங்கி எப்படியாவது அவர்களைக் கண்டுபிடித்துக் கடிதம் மூலம் அவர்களுக்கு என் மனமாற்றத்தையும், இரட்சிப்பையும் அறிவித்தேன். அந்த வகையில் என்னை முதன் முதல் பாவத்தில் ஈடுபடுத்திய என் பள்ளி நண்பன் பம்பாய் சென்று விட்டான் என்பதை அறிந்தேன். என் ஆரம்ப கால சினிமா நண்பனின் விலாசத்தை வெகு கடினப்பட்டு தேடி கேட்டு வாங்கினேன்.

பம்பாய் ஒரு சொர்க்கமாக இருக்கிறது

அவன் விலாசம் கிடைத்தவுடன் அவனுக்கு தனியாக ஜெபித்து அவனுக்கு கடிதம் ஒன்று எழுதினேன். என்னில் ஏற்பட்ட ஆவிக்குரிய மாற்றம், இரட்சிப்பு யாவையும் தெளிவாக எழுதி நீயும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதாக வற்புறுத்தி அவனுக்கு கடிதத்தை எழுதி முடித்தேன். ஆனால் அவனோ என் கடிதம் கிடைத்தவுடன் மிகுந்த சந்தோஷப்பட்டு என்னையும் பம்பாய் வரும்படி அழைத்து கடிதம் எழுதினான். அந்தக் கடிதத்தில் பம்பாய் ஒரு சொர்க்கம் போல் இருப்பதாகவும், பம்பாயின் சந்தோஷத்தை அனுபவிக்க 24 மணி நேரம் எனக்குப் போதவில்லை என்பதாகவும் இங்கு விதவிதமாகச்

சுவர்க்கத்தை அனுபவிக்கலாம் என்றும் அவன் எழுதினான். ஆனால் இரட்சிப்பைப் பற்றி நான் குறிப்பிட்டு எழுதியதைப் பற்றி ஒரு வார்த்தையும் தன் கடிதத்தில் விமர்சிக்கவில்லை. அது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அதனால் அதன் பிறகு நானவனோடு கடிதத் தொடர்பு வைக்கவில்லை.

என் நண்பனுக்கு ரகசிய வியாதி

சில மாதங்கள் கழித்து அவனே ஒரு கடிதம் எனக்கு எழுதினான். அதில் தனக்கு ஒரு இரகசிய வியாதி பீடிக்கப்பட்டதாயும் அதை தன் கம்பெனி டாக்டரிடம் காட்ட வெட்கப்படுவதாகவும் அந்த வியாதியின் விபரம் மற்றவர் அறிந்தால் தன் உயர்ந்த உத்தியோகத்திற்கு அவமானமாகும் என்பதாலும். மேலும் நீ இப்போது டாக்டராக இருப்பதால் என் வியாதியின் விபரத்தை தெளிவாக இதில் குறிப்பிடுகிறேன். அதற்கான வைத்தியத்தையும் மருந்தையும் சீட்டில் குறித்து உடனே தனக்கு அனுப்ப வேண்டும். நீ குறிப்பிடும் மருந்தை ரகசியமாக வாங்கி உட்கொள்வேன் என்பதாகவும் எழுதியிருந்தான். இதை வாசித்த எனக்கு அவனைக் குறித்து முன்னை விட பெரும் பாரம் உண்டானது. அவன் எழுதிய கடிதத்துக்குப் பதிலாக ஒரு நீண்ட கடிதம் எழுதினேன். அதில்... நீ கேட்டுக் கொண்டபடி உன் ரகசிய வியாதிக்கு மருந்து குறித்து எழுதி அனுப்ப இப்போது நான் இஷ்டப்படவில்லை. முதலில் நீ இயேசுவுக்கு உன்னை ஒப்புக் கொடு. உன் சரீர சந்தோஷந்தான் பிரதானம் என நினைக்காதே. இந்த மாமிச இன்பத்துக்கு எப்போதும் சலிப்பே இல்லை. முடிவும் இல்லை. இதற்கு அப்பால் நிரந்தரமான ஓர் ஆவிக்குரிய இன்பம் உண்டு. அதை இரட்சிக்கப்பட்டால் தான் அனுபவிக்க முடியும். அதை நீ ஒருமுறை ருசிக்க வேண்டும் என்பதுதான் என் அவா. அதற்கு நீ இடம் கொடுப்பாயா? உன்னையும் இயேசு நேசிக்கிறாரே. உன் ஜீவியத்தை சரிப்படுத்து. உன் சிற்றின்ப போகத்தை விட்டுவிடு. இந்த சரீர இன்பம்தான் உலகம் என்று நினைக்காதே என்பதாக எழுதி சில வசனங்களையும் குறிப்பிட்டு நீண்ட ஒரு கடிதம் எழுதினேன்.

இந்த உலக இன்பங்கள் இறைவனே கொடுத்தது

அதற்குப் பதில் உடனடியாக வந்தது. ஆனால் மிகவும் சூடாக வந்தது. அந்தக் கடிதத்தில் நீ ஒருவன் தான் உலகத்திலேயே

டாக்டர் என்று நினைக்கிறாயா? இங்கேயே இரகசியமாகவும் வைத்தியம் செய்து கொள்ள என்னால் முடியும். ஏதோ நீ என் ஆத்ம நண்பன் என்பதால் என் இரகசியம் உன்னோடு போகட்டும் என்று எழுதிக் கேட்டேன். நீ என்னடாவென்றால் பெரிய பிகு பண்ணிக் கொள்கிறாயே என்று கொச்சையாக எழுதி தன் கோபத்தைத் தீர்த்துக் கொண்டான். அந்தக் கடிதத்தில் கடைசியாக அவன் எழுதிய வாசகம் தான் என்னை அவனைப் பற்றிய நம்பிக்கையை இழக்க வைத்தது. அவன் எழுதிய வாசகம் இதுதான். இந்த உலகம் கடவுளால் உண்டாக்கப்பட்டது. இந்த உலகம் காணும் இன்பங்களும் மனுஷ படைப்புகளும் கடவுள் கொடுத்த ஞானத்தால் உண்டானது. ஆகவே அவைகளை அனுபவிக்க மனுஷனுக்கு எல்லா விதத்திலும் உரிமையுண்டு. நான் ரிட்டயர்டு ஆன பிறகு (வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு) ஈசிச் சேரில் உட்கார்ந்து கொண்டே மரணத்தை எதிர்பார்க்கும் அந்த கடைசி வயதில் நீ கடிதத்தில் எழுதிய உபதேசத்தை, ஆலோசனையைக் குறித்து யோசிக்கிறேன். இது என் வாலிப வயது காலம், இந்த வயதில் அவைகளை அனுபவிக்க வேண்டாம் என்றா சொல்கிறாய்? உலகத்தை இப்போது அனுபவிக்காமல் எப்போது அனுபவிக்கச் சொல்கிறாய்?

என் நண்பன் விபத்தில் இறந்து போனான்

நம் நட்பு தொடர வேண்டுமானால் இனி எழுதும் எந்தக் கடிதத்திலும் தயவு செய்து இது மாதிரி போரடிக்கும் கிழ உபதேசத்தை எனக்கு எழுதாமல் இரு. நான் இப்படி எழுதியது உனக்கு வேதனையாக இருக்கும். என்னை மன்னித்து விடு என்று எழுதி முடித்திருந்தான். அந்தக் கடிதத்தை அப்படியே தேவசமூகத்தில் வைத்து அவனுக்காக, அவன் ஆத்துமாவுக்காக, இரட்சிப்புக்காக கர்த்தரிடம் அழுது ஒய்ந்தேன். அதன்பின் நான் அவனுக்கு கடிதமே எழுதவில்லை. 6 வாரங்கள் கழித்து அவனுடைய தகப்பனாருக்கு ஒரு தந்தி வந்தது. அது அவன் வேலை செய்த அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டது. அதில்.. உங்கள் மகன் விபத்தில் இறந்து போனார். உடலை நாங்கள் உங்கள் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்து விட்டோம். மன்னிக்கவும். வருத்தப்படுகிறோம்.

அவன் தந்தை கண்ணீரோடு கூறினார்

அவர் அறையில் உள்ள அவரின் பொருள்களையும் உடைகளையும் அவருக்கு சேர வேண்டிய சம்பள தொகையையும் வந்து பெற்றுப் போகவும் என்று மட்டும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. மரண விவரம் சேலத்தில் உள்ள பெற்றோருக்கு அறிவித்தாலும், அந்நாட்களில் இப்போது உள்ளது போல் டீசல் என்ஜின், எலக்ட்ரிக் என்ஜினின் இல்லை. நீராவி என்ஜின் பொருத்தப்பட்ட ரயிலானதால் பம்பாய் போய்ச் சேர மூன்றரை நாள் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. ஆகையால் தான் அவன் சரீரத்தை அரசாங்க சட்டத்தின்படி கம்பெனியே அடக்கம் செய்து விட்டது. அவன் தகப்பனார் மட்டுமே பம்பாய் சென்று உடைமைகளை வாங்கிக் கொண்டு திரும்பினார். திரும்பி வந்தவுடன் அவன் தகப்பனார் அவன் மரித்த விவரத்தை எனக்கு வந்து விவரித்துக் கூறி கண்ணீர் விட்டார்.

நீச்சல் குளத்தில் கால் வழுக்கி விழுந்து

பம்பாயில் பெண்களும், ஆண்களும் சேர்ந்து நீச்சல் பயிலும் அல்லது குளிக்கும் நீச்சல் குளங்கள் பல உண்டு. அவன் வழக்கமாக தினசரி ஒரு நீச்சல் குளத்துக்குச் செல்வதுண்டு. அன்று வழக்கம் போல் நண்பர்களுடன் நீச்சல் குளத்திலிருந்து படிக்கட்டு வழியாக ஈரத் தலையைத் துவட்டியபடியே மேலே ஏறி வந்தான். கடைசி படிக்கட்டில் கால் வைக்கும் போது கால் வழுக்கி அப்படியே உருண்டு திரும்பவும் குளத்திலேயே விழுந்தான். கீழே விழும் போது தலையில் பலமான அடிபட்டதால் மயக்க நிலையிலேயே தண்ணீரில் விழுந்தான். விழுந்த நிலையில் சிறிது நேரம் தண்ணீரில் அடிப்பாகத்தில் அப்படியே கிடந்தான். நண்பர்கள் ஓடி வந்து பார்த்தார்கள். தண்ணீர் கண்ணாடிபோல் தெளிவாக இருந்ததாலும் தண்ணீருக்குள் விளக்குகள் இருந்ததாலும் உள்ளே விழுந்த அவனை நன்றாகப் பார்க்க முடிந்தது. அவன் தானே மேலே வந்து விடுவான் என்று நண்பர்கள் காத்திருந்தனர். சரீரம் மேலே எழும்பவில்லை. சில நிமிடங்களில் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் நீர்க்குமிழிகளும் நுரையும் முத்து முத்தாக வெளி வந்தன.

நிலைமையை யூகித்த ஒருவன் நீரில் குதித்து அவன் முடியைப் பற்றிப் பிடித்து மேலே கொண்டு வந்தான். உடனே டாக்டர்

அழைக்கப்பட்டார். அங்கேயே நீச்சல் குளத்துக்கென்று ஒரு டாக்டர் எப்போதும் உண்டு. உடனடியாக சிகிச்சை நடைபெற்றது. வயிற்றில் உள்ள நீர் வெளியே கொண்டு வரப்பட்டது. ஆனால் எதுவுமே பயனளிக்கவில்லை. அவன் மரித்துப் போனான். ஆம் என் நண்பன் மரித்தே போனான் – என் நண்பன் போய்விட்டான் – இனி நான் அவனைச் சந்திக்க முடியாது – லாசரு ஐசுவரிய வானைப் போல் நாங்கள் இரண்டு பேர் போய்ச் சேரும் இடமும் முற்றிலும் மாறுபட்டதாகும். இந்த மரணம் என் உள்ளத்தை பெரிதும் பாதித்தது. அவனுக்கு கடிதம் மூலம் இரட்சிப்பை நான் அறிவித்திருந்தாலும் ஏதோ ஒரு குற்ற உணர்வு என்னைக் குத்திக் கொண்டே இருக்கிறது. பாவம் செய்ய நாங்கள் ஒன்றாய்ப் பணம் செலவு செய்த நாட்கள் என் ஞாபகத்துக்கு வருகின்றன.

ஜாதக, கைரேகை பொய்த்தது

அவனை நேரில் சந்தித்து இரட்சிப்பைக் குறித்து ஏன் பேசியிருக்கக் கூடாது? பணம் செலவழித்து பம்பாய் சென்று அவன் மரணமடையுமுன்னே அவனை நேரில் சந்தித்துப் பேசி ஜெபித்து வந்திருந்தால் என் மனம் நிச்சயம் மிகவும் சமாதானம் அடைந்திருக்கும். இவன் பணம் செலவழித்துக் கணித்திருந்த நட்சத்திர ஜாதகம் கூறியது இவனின் ஆயுது 87க்கு மேல் நீடிக்கும் என்றும் இவன் கைரேகையின் ஆயுள் ரேகையோ 80ஐ தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது என்றும் கூறியது. ஆனால் இவன் இறந்தது தனது 27ம் வயதில் ஆகும். என்ன பரிதாபம். எவ்வளவாய் தன் ஜாதகத்தையும் கைரேகையையும், தன் உயர்ந்த பதவியையும், வாலிப பெலத்தையும், பணத்தையும் நம்பியிருந்தான்.

காலங்கள் கர்த்தரின் கரத்தில் இருக்கிறது

இன்று பல கிறிஸ்தவர்கள் நாள் பார்ப்பதும் குழந்தை பிறந்தால் உடனே நட்சத்திரம் அறிந்து ஜாதகம் கணிப்பதும், கைரேகை, கிளி ஜோசியம் பார்ப்பதும் எத்தனை பெரிய மடமை. இப்படிச் செய்கிறவரிடத்தில் கிறிஸ்து இல்லை என்பதை அறியாமல் இருக்கிறார்களே – உபா. 18:10 நம்மைப் பற்றிய காரியங்களை, பலன்கள் பிற்கால இரகசியம் யாவும் கர்த்தருடைய கரங்களில் இருக்கின்றன என்ற விவரம் பலர் அறிந்தும் அறியாமலே இருக்கிறார்கள்.

"இனிவரும் காரியங்களை என்னிடத்தில் கேளுங்கள்" என்று கர்த்தர் நம்மோடு கூறுகிறார் - ஏசா 45:11. தாவீது கூறுகிறான்: "கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்..., என் காலங்கள் உமது கரத்திலிருக்கின்றது" - (சங் 31:14, 15) என்று விசுவாசித்தான். கர்த்தர் கூறுவதைக் கவனியுங்கள்... 'குறி சொல்லுகிறவனும் நாள் பார்க்கிறவனும் அஞ்சனம் பார்க்கிறவனும், செத்தவர்களிடத்தில் குறி கேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்க வேண்டாம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்' - உபாகமம் 18:10, 11, லேவி. 19:26 என்று கர்த்தர் திட்டவட்டமாக எச்சரித்திருக்கிறார்.

சவுல் ராஜா கர்த்தரையும் அவர் திருவசனத்திலும் நம்பிக்கை கொள்ளவில்லை. தன் சரீர பெலத்தையும் நன்மை பயக்காத ஜாதகங்களையும் நம்பினான், கர்த்தருடைய வசனத்தை அலட்சியம் செய்தான், கர்த்தருடைய வசனத்தைக் கேட்கவே இஷ்டமில்லாத ஒரு பெயர்க் கிறிஸ்தவனாக வாழ்ந்தான். மனம் திரும்புவதில் அவனுக்கு இஷ்டமில்லை.

சுய நாமம், பெலன், பட்டம் பதவியை நம்புவது மதியீனம்

தன் நாமம், பதவி, பட்டம், புகழ், பணம், இளமை, ஆரோக்கியம், தன் அசாதாரணமான இளமைகள் தன்னைக் காப்பாற்றும் என்று நம்பினான். தன் மரணம் வெகு தொலைவில் உள்ளது என்று நினைத்தான். ஆனால் அந்த இச்சை சடிமாய் தன்னைச் சந்திக்கும் என்று அவன் கருதவில்லை.

"மனுஷனுக்குச் செம்மையாய் தோன்றுகிற வழியுண்டு, அதின் முடிவோ மரண வழிகள்" - நீதி 16:25, 14:12.

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்" - நீதி 28:13

"நீ சுகமாய் வாழ்ந்திருக்கையில் நான் உனக்குச் சொன்னேன். கேட்கேன் என்றாய். கீழ்ப்படியாதது உன் சிறு வயது முதலே பழக்கம்" - எரே 22:21.

"துர் கிரியைக்கு ஏற்ற தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால் மனுஷன் பாவம் செய்ய துணிகரம் கொள்கிறான்" - பிர 8:11

அற்ப சரீர சுகத்துக்காக கிறிஸ்துவத்தை இழந்து போகாதே

'இன்றே இரட்சண்ய நாள்' என்று வேதம் கூறுகிறது. மேலும் **''கர்த்தரை கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்! அவர் சமீபமாய் இருக்கும்போதே அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்!''** இப்படியெல்லாம் வேதம் நம் ஒவ்வொருவரையும் எச்சரிக்கிறது. தேவன் நமக்கு கொடுத்ததோ ஒரே ஒரு வாழ்க்கையாகும். மனந்திரும்ப வேண்டுமானால் நமக்கு கொடுக்கப்பட்ட இந்த வாழக்கையின் சந்தர்ப்பத்திலேயே மனந்திரும்பினால் தான் உண்டு. மரித்தபின் மனந்திரும்ப வழியே இல்லை. இதை வாசிக்கிற வாலிப மக்களே, அற்ப கூழுக்காக தன் சேஷ்ட புத்திர பாக்கியத்தை இழந்த ஏசாவைப் போல் ஒரு சில நிமிட நேரத்தில் திரிந்து போகும் அல்லது தணிந்து போகும் இந்த சரீர உணர்ச்சியின் இன்பத்துக்காக பெரிய இரட்சிப்பையும் அதன் பரலோக சந்தோஷத்தையும் இழந்து போக வேண்டாம். உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு பாவங்களை இயேசு கிறிஸதுவிடம் அறிக்கையிட்டு விட்டுவிட்டால், பாவ மன்னிப்பை உடனே பெற்றுக் கொள்ள முடியும் - யோ 3:3. **'ஒருவன் மறுபடியும் பிறவா விட்டால் அவன் தேவனுடைய இராஜ்ஜியத்தை காண மாட்டான்'**. இதை வாசிப்பவர்கள் இப்போதே இந்த நிமிடமே மனந்திரும்பினால் உடனே இரட்சிப்பு. என் நண்பன் இறந்து போனான். இனி அவனுக்கு மனந்திரும்ப, இரட்சிக்கப்பட சந்தர்ப்பமே இல்லை. ஆனால் இதை வாசிக்கும் நீ இன்னும் சாகவில்லை. ஆகவே தேவன் கிருபையாக உனக்கு மனந்திரும்ப சந்தர்ப்பம் கொடுத்துள்ளார். அதை பயன்படுத்தி கொள்வாயா? இன்றே இரட்சிக்கப்படு. அதுதான் தேவ சித்தம்.

பாவம் உன்னை பாதாளத்தில் தள்ளும்

என் அன்பான வாலிப தம்பி, தங்கையே,

உன் வழியைச் சரிப்படுத்திக் கொள். உன் தவறான நண்பனை அடையாளம் கண்டு விலகிக் கொள். என் நண்பன்தான் என்னை முதல் பாவம் செய்ய தைரியப்படுத்தினான். தைரியப்படுத்தியது மட்டுமல்லாமல், பாவம் செய்ய தன் பணத்தை எனக்காகச் செலவழித்து உதவியும் செய்தான். அந்த ஆரம்ப பாவம் என்னை தொடர்ந்து பல பாவங்களைச் செய்ய தைரியம் கொடுத்தது. அப்படியே பெரும் பாவங்களிலும் விழுந்தேன். பெரும் பாவியாக

மாறினேன். தவறான நண்பர்களின் சேர்க்கை என்னை பாவத்தில் தள்ளி விட்டது. அதன் மூலம் என் அம்மாவையும் அப்பாவையும் கலங்கப் பண்ணினேன். கண்ணீர் விட வைத்தேன். என்னால் என் பாவ ஜீவியத்தால் என் வீட்டில் சமாதானம் இல்லாமல் போனது. வேதத்தில் முதல் சங்கீதம், முதல் வசனத்தை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள். அதிக சிரிப்பு, அதிக தமாஷ், பரிகாசம், கிண்டல் இவைகள் உன் ஆவிக்குரிய ஜீவியத்தை திசை திருப்பி விடும். ஜாக்கிரதை! உன் பெற்றோர் அல்லது மற்றவர் அறியவில்லை என்று நீ செய்கிற பாவம், பேசுகிற பொய் ஆரம்பத்தில் உன்னை தைரியப்படுத்தலாம். ஆனால் அதுவே உன் அழிவுக்கு அஸ்திவாரமாக மாறும். மற்றவர்களால் எச்சரிக்கைப்படும் போதே உன் வழியைச் சரிப்படுத்திக் கொள். அப்படி ஆரம்பத்திலேயே சரிப்படுத்திக் கொள்ளவில்லையானால் அதன் பிறகு நீ விரும்பினாலும் அந்தப் பாவத்திலிருந்து விடுபடவே முடியாது. இது பலரின் அனுபவம். ஜாக்கிரதை.

"தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவனோ, தீங்கில் விழுவான்" - நீதி 28:14. "அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடுதியில் நாசமடைவான்" - நீதி 29:1. தானியேல் கைதியாக ஜெயிலில் இருந்தும் கர்த்தர் மேல் கோபப்படாமல், கர்த்தரை வெறுக்காமல் முறுமுறுக்காமல் ஜெயிலுக்குள் தன் நண்பர்களை எப்படிப் பட்டவர்களாக தெரிந்தெடுத்தான் என்பதைக் கவனி. தானியேல் 2:17,18 இல் ஜெபிக்கிற நண்பர்களைத் தானியேல் தெரிந்து கொண்டான் என்று எழுதியிருக்கிறது.

நரகத்திலிருந்து தப்பிக்க நல்ல நட்பை நாடு

உனக்கு அண்ணனாய், ஊழியனாய், ஆலோசனை கூறுகிறேன். உன் கல்லூரி வாழ்க்கை அல்லது உயர் நிலைப் பள்ளி வாழ்க்கையில் அடிக்கடி ஜெபிக்கிற நண்பர்களை கண்டுபிடித்து அவர்களோடு சகவாசம் வைத்துக் கொள். இயு என்ற ஸ்தாபன ஊழியர்கள் கல்லூரி வாலிப பிள்ளைகள் மத்தியில் நல்ல ஊழியம் செய்கிறார்கள். அவர்களோடு தொடர்பு கொள் அல்லது அவர்களை உன் கல்லூரிக்கு அல்லது பள்ளிக்கு வரவழைத்து நட்பும் வைத்துக் கொள், அது உன்னைப் பாதுகாக்கும். என் நண்பனுக்கு ஏற்பட்ட இயேசு இல்லாத மரணம் உனக்கு உண்டாகக்

கூடாது என்பதற்காக இதை எழுதுகிறேன். இனி நான் என் நண்பனுக்காக எத்தனை நாள் உபவாசம் இருந்து ஜெபித்தாலும் அவன் ஆத்துமாவை சரிப்படுத்தவே முடியாது. நரக தீர்ப்பிலிருந்து அவனை யாராலும் இனி தப்புவிக்க முடியாது.

வாலிபத்தைக் காத்துக் கொள்

மறுபடியும் கூறுகிறேன். உயிரோடு இருக்கும்போதே இரட்சிக்கப் பட்டால் தான் உண்டு. அதன் பிறகு மனம் திரும்ப சந்தர்ப்பமே இருக்காது. ஒரே ஒரு வாழக்கை. இந்த வாழ்க்கையைக் கிறிஸ்துவோடு வாழ்ந்து அனுபவித்துப் பார். அதில் எத்தனை சுகம், இன்பம், சந்தோஷம், ஆறுதல் உண்டு என்பதை உணருவாய்.

இதை வாசிக்கும் வாலிபப் பிளளைகளைக் கர்த்தர் தாமே எல்லா உலக மாயைக்கும் விலக்கிக் காத்து, தவறான நண்பர்களிட மிருந்து காப்பாற்றி சரீரத்தையும், ஆத்துமாவையும், பரிசுத்தமாக, குற்றமற்றதாக காத்து வழி நடத்துவாராக. ஆமென்.

'என் குற்றம் என் வாலிபப் பிராயத் தவறுகள், கர்த்தரின் பணிக்கு அழைப்பைக் குறித்த என் அசட்டை ஆகியவை என்னை முகமுகமாய் பார்க்கின்றன' என ஸ்காட்லாந்தைச் சேர்ந்த சாமுவேல் ரூதர்போர்ட என்பவர் இப்படி கூறுகிறார்.

வாலிப விசுவாசிகள், ஊழியர்களின் கவனத்திற்கு

ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒவ்வொரு விசுவாசிக்கும் காலை ஜெபம், மாலை ஜெபம் மிக முக்கியமானதாகும். இந்த இரண்டு ஜெப வேளைகளும் நாம் கர்த்தரோடு பேச பயன்படுவது மட்டுமல்லாமல் நம் ஆவிக்குரிய ஜீவியத்தின் நிலையை அளந்து பார்க்கும் அளவு கோலாகவும் பயன்படும். மனம் திரும்பி பாவங்களை அறிக்கையிட்டு இரட்சிப்பின் அனுபவத்தை பெறும்போது விவரிக்க இயலாத ஓர் ஆவிக்குரிய சந்தோஷம் நம் உள்ளத்தில் உண்டாகும். இந்த சந்தோஷத்தின் அடிப்படையில் நம் ஆத்துமா ஒவ்வொரு நாளும் தேவனோடு உறவு கொள்ளத் துடிக்கும். அந்த ஜெப நேரங்கள் நம் ஏமாற்றங்களை, வேதனைகளை, கவலைகளை மறக்கும் ஓர் இன்ப நேரமாகும். எப்போது ஜெப நேரம் வரும் என்று மிக வாஞ்சையோடு மனம் காத்திருக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட ஆவிக்குரிய ஜெப ஆவலும், சந்தோஷமும் தேவனுக்கும் நமக்கும்

நல்ல உறவு இருக்கும் வரை தொடர்ந்து இருக்கும். ஆவிக்குரிய எண்ணங்களிலிருந்து நாம் விலகும்போது பாவ எண்ணங்களும், பாவச் செய்கைகளும் நமக்குள் உண்டாகும். அதன்பின் நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவிலே ஒரு முறிவு, இடைவெளி உண்டாக ஆரம்பிக்கிறது. கர்த்தரோடு உள்ள உறவில் முறிவு உண்டாவதற்கு முதல் அடையாளம். நமக்கு ஜெபிக்க வேண்டும் என்றிருந்த ஆரம்ப கால ஜெப ஆவல் கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பிக்கும். அதுமாத்திரமல்ல, ஜெபிக்கும்போது உண்டாகிக் கொண்டிருந்த ஆத்தும சந்தோஷம் இப்போது நம்க்குள் உண்டாவது நின்று போகும்.

என் ஜெப நேரம் பரலோக சந்தோஷமாய் இருந்தது

மேலும் அந்த சந்தோஷத்தை இழந்திருக்கிறோமே என்ற கவலையும் உறுத்தலும் நமக்குள் உண்டாவதை நாமே விரும்பாமல் இருப்போம். இந்த நிலையை ஒரு விசுவாசி புரிந்து கொண்டு இழந்து போன ஜெப ஆவலையும் சந்தோஷத்தையும் மீண்டும் பெற முயற்சிக்க வேண்டும். அதை அவன் விரும்புவானேயானால் அவனுக்குள் நிச்சயம் உயிர் மீட்பு உண்டாகும். ஆனால் அதைப் பற்றி கவலையீனமாக இருந்தால் பயங்கர பின்மாற்றம் உண்டாகும். என் வாழ்க்கையிலும் மேற்கூறிய அனுபவம் இரட்சிக்கப்பட்ட ஆரம்ப காலத்திலேயே உண்டானது. நான் 1964 ஆம் வருடம் இரட்சிக் கப்பட்டேன். என் ஆரம்ப நாட்களில் ஆவிக்குரிய வாழ்க்கையில் என்னை ஆவிக்குரிய பாதைக்கு வழி நடத்தின 4 குடும்பங்கள் உண்டு. இந்த நான்கு குடும்பங்களும் எனக்கு ஆவிக்குரிய ஆலோசனைக் கொடுத்து ஜெபித்து வழி நடத்தினர். ஒவ்வொரு வாரமும் அந்த நான்கு குடும்பத்தினரையும் போய் சந்திப்பேன். நாங்கள் பல ஆவிக்குரிய காரியங்களை பகிர்ந்து கொண்டு சேர்ந்து ஜெபிப்போம். இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து என் தனிப்பட்ட ஜெப நேரங்கள் பரலோக சந்தோஷமாக அமைந்திருந்தன.

எனக்கு ஜெபிக்க வாஞ்சை இல்லை

ஆனால் ஒருநாள் என் காலை ஜெபம் சீக்கிரமாய் முடிந்துவிட்டது. மாலை ஜெபத்திலும் உற்சாகம் இல்லை. ஜெபத்தை சீக்கிரமாக முடித்துக் கொண்டேன். இந்தத் திடீர் மாற்றம் நான்கு நாட்கள் தொடர்ந்தன. ஐந்தாவது நாள் எனக்கு ஜெபிக்க அறவே மனம்

வரவில்லை. கடமைக்காக மாத்திரம் ஜெபித்தேன். அன்று பகல் முழுவதும் கடந்த சில தினங்களாக ஏன் என்னால் ஆசையோடு ஜெபிக்க முடியவில்லை என்பதே சிந்தனையாக இருந்தது. தினம் வேதம் வாசித்தேன். ஆனால் என்ன வாசித்தேன் என்று புரியாமலே வாசித்திருக்கிறேன். அது மாத்திரமல்ல ஏதோ ஒரு குற்ற உணர்வு என் உள்ளத்தில் தோன்ற ஆரம்பித்துவிட்டது. ஆனால் அந்தக் குற்றம் என்ன என்பதை என்னால் உணர முடியவில்லை. நான் மறைமுகமான பாவத்தில் விழுந்து விட்டேனோ? அதையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஜெபிக்காதிருக்க காரணம் என்ன?

எனக்கு கவலையோ, பிரச்சனையோ, தேவையோ வரும்போது என் வீட்டின் அருகே சில பர்லாங் தூரத்தில் ஒரு ரயில்வே பாலம் ஒன்று உண்டு. அந்தப் பாலத்தின் வாராவதியின் மேல் அமர்ந்து கொண்டு ஜெபிப்பது என் வழக்கம். அப்படியே இம்முறையும் ஒருநாள் முழுவதும் உபவாசம் இருந்து என்னை ஜெபத்தில் உற்சாகம் இழக்கச் செய்த அந்தப் பாவம் என்ன? என்பதை கண்டுபிடிக்க அதே பாலத்தில் அமர்ந்து யோசிக்கலானேன். அந்தப் பாலம் இருந்த இடம் ஓர் ஏகாந்தரமான இடம். ஜன நடமாட்டம் இல்லாத இடம். அநேக சமயங்களில் இந்தப் பாலத்தில் உட்கார்ந்து தலை கவிழ்ந்து சத்தம் போட்டு அழுது என்னை ஆறுதல் படுத்திக் கொண்ட அனுபவம் எனக்கு உண்டு. இம்முறையும் அதே இடத்தில் இரண்டு நாள் தொடர்ந்து சென்று என் பாவம் என்ன? என்பதை கண்டுபிடிக்க ஜெபத்தோடு முயன்றேன். ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஜெபக்குறைவு என்னை கலங்க வைத்தது

வெளியரங்கமான பாவத்தில் விழுந்திருந்தால் சீக்கிரம் என் பாவத்தை கண்டுபிடித்திருக்கலாம். ஆனால் நான் வெளிப்படையான பாவத்தில் விழவில்லை என்பதை மட்டும் என்னால் உணர முடிந்தது. பின் ஏன் என்னால் ஜெபிக்கவே முடியவில்லை? திரும்பத் திரும்ப யோசித்தேன். காலையிலிருந்து நான் சென்று வந்த இடத்தை சந்தித்த துயரங்களைக் குறித்து யோசித்தேன். ஆஸ்பத்திரியில் பாவம் நடந்ததா? என்றும் யோசித்தேன். வியாதியஸ்தரை சந்திக்கப் போய் வந்த வீடுகளில் தவறேதும் நடந்ததா? இப்படி

எல்லாவற்றையும் ஆராய ஆரம்பித்தேன். எங்காவது பாவத்தில் விழுந்தேனா? இல்லை பின் ஏன் என்னால் ஜெபிக்க முடியாமல் போனது? இன்னும் என்னில் உள்ள குற்ற உணர்வு என்னை விட்டு நீங்கவில்லையே என்று கலங்கினேன்.

எங்கே தவறு செய்தேன்?

கடைசியில் ஜெபிக்கச் செல்லும் விசுவாசிகளின் (ஆலோசனை கூறும்) வீடுகளில் எங்காவது தவறு நடந்ததா? என்று ஆராய ஆரம்பித்தேன். குற்ற உணர்வின் காரணம் இப்போது தான் கண்டு பிடிக்கப்பட்டது. விசுவாசிகளின் வீடுகளாயிற்றே. இங்கு தவறு உண்டாக வழியில்லையே என்ற எண்ணத்தினால் தான் முதலிலேயே இந்த வீடுகளைப் பற்றி யோசிக்க முடியவில்லை. இப்போது நான் வழக்கமாக செல்லும் ஒவ்வொரு விசுவாசிகள் வீடாக யோசித்தேன். கடைசியாக மூன்றாவது வீட்டில் தான் நான் பாவத்தில் விழ இருந்தேன் என்பதை உணர்ந்தேன். அதுவும் முழுவதுமாக விழவில்லை. மாம்ச செயலில் விழவில்லை. ஆனால் மனதில் விழ இருந்தேன். சொல்லப் போனால் மனதிலும் கூட பாவ எண்ணம் உருவாகவில்லை. பின் எப்படி அதை பாவம் என்பது? நான் முன்பு கூறியபடி இந்த நான்கு வீடுகளுக்கும் ஜெபத்துக்காக வாரா வாரம் செல்வதுண்டு அல்லவா? இந்த நான்கு குடும்பங்களும் என்னை மிகவும் நேசித்தன. நல்ல உபசரிப்பு, நல்ல ஆவிக்குரிய ஆலோசனைகளை இந்த நான்கு குடும்பங்களும் எனக்கு அளித்து வந்தன.

ஒரு குறிப்பிட்ட குடும்பத்தோடு அதிக நேரம் செலவழிக்க ஆசை

ஆனால்... மற்ற மூன்று குடும்பங்களிலும் சென்று அங்கே நான் ஜெபத்துக்காகவும், ஆவிக்குரிய காரியங்கள் பேசவும், செலவழிக்கும் நேரத்தை விட இந்த நான்காவது குடும்பத்தினரின் வீட்டில் மட்டும் அதிக நேரம் செலவழித்தேன். அதிக நேரம் இந்த குடும்பத்தினரோடு பேச ஆசைப்பட்டேன். அதிக சிரிப்பு, அதிகமான தமாஷ் இப்படியாக அதிக நேரங்களை அவ்வீட்டில் செலவழித்தேன். இங்குதான் என்னை அறியாமல் சிந்தனையில் அந்தது மனதில் கற்பனையில் பாவத்தில் விழ இருந்தேன் என்று உணர்த்தப்பட்டேன். மற்ற குடும்பங்களின் வீடுகளுக்கு செல்லும் போது வேதம் வாசித்து ஜெபித்து விட்டு உடனே திரும்பினேன்.

ஆனால் இந்த குடும்பத்தினரோடு மட்டும் அதிக நேரம் பேசவும் அரட்டை அடித்து நேரம் போக்கவும் விரும்பினேன்.

மனத்தளவில் பாவம் செய்ய இருந்தேன்

என்னை அறியாமல் ஏதோ அந்த வீட்டில் என் மனம் லயிப்பதையும், கவருவதையும் அடிக்கடி அந்த வீட்டினரோடு பேச வேண்டும் போல் என் மனம் விரும்புவதையும் உணர்ந்தேன். அந்த வீட்டினரோடு மட்டும் மிகவும் சிரித்து, தமாஷ் பேசி மகிழ்ந்தேன். என்றாலும் ஒரு சிறிதும் நான் அந்த வீட்டில் பாவத்தில் விழவில்லை. பாவ எண்ணங்களும் என் உள்ளத்தில் தோன்றவும் இல்லை. அந்த வீட்டிலுள்ள பெண் பிள்ளைகளும் என்னிடம் தவறாக நடந்து கொள்ளவில்லை. ஆனாலும் மனத்தின் ஆழத்தில் ஏதோ பாவம் நடந்துவிடும் என்பது போன்ற ஒரு குற்ற உணர்வு உண்டாக ஆரம்பித்தது. அந்தக் குற்ற உணர்வு தான் என்னை தேவ சமூகத்தில் நான்கு நாட்கள் தேவனுக்கு முன் நிற்க முடியாதவனாக்கியது என்பதை உணர்ந்தேன்.

முதல் பாவம் மனதிலே உண்டானது

இந்த குற்ற உணர்வு ஆவியானவரால் உண்டாவதாகும். இது எனக்கு மட்டுமல்ல, எல்லா விசுவாசிகளுக்கும் உண்டு. ஆனால் அந்த உணர்வை பெரும்பாலானவர்கள் அசட்டை செய்து கவலையீனமாக கவனிக்காமல் விட்டு விடுவதாலேயே முடிவில் வெளியரங்கமாக பாவத்தில் விழுந்து விடுகிறார்கள். எந்த ஒரு மனுஷனும் எடுத்த எடுப்பிலேயே திடீரென்று பாவத்தில் விழுந்து விடுவதில்லை. மேலும் யாரும் முதலில் வெளிப்படையான பாவத்தில் விழுந்து விடுவதில்லை. ஒருவன் வெளிப்படையாக பாவத்தில் விழுவதற்கு முன்பே முதலில் தன் மனதில் அல்லது தன் சிந்தனையில் விழுந்திருக்க வேண்டும். அதன் பிறகுதான் வெளிப்படையான பாவத்தில் விழுந்து விடுகிறான்.

மனதாலும் கூட பாவம் செய்யாதிருக்க தீர்மானம்

அந்த விதமாக எண்ணத்தில், உள்ளத்தில் பரிசுத்தம் இல்லாத ஓர் நிலை உண்டாகும்போதே அதை சரிப்படுத்திக் கொள்ளாமல் போனால் மட்டுமே அவன் வெளிப்படையாக பாவத்தில் விழுந்து விடுகிறான். என் நிலையும் அந்தக் காலத்தில் அப்படித்தான் பாதிக்

கூட்டது. நம் உள்ளத்தில் பாவம் உண்டா என்பதை ஜெபிக்கும் போதே நம்மால் உணர்ந்து கொள்ள முடியும். கண்டு பிடிக்கவும் முடியும். அறியாமல் செய்து விட்டேன் என்று கூறுவதெல்லாம் பொய். முதலில் நான் தீர்மானம் எடுத்தேன். சோதனை உண்டாகும் என்று அறிந்த அந்த குறிப்பிட்ட நான்காம் வீட்டுக்கு இனி செல்லக் கூடாது என்பதுதான் நான் எடுத்த தீர்மானமாகும். அந்தக் குடும்பத்தினர் என் மேல் மன வருத்தம் கொண்டாலும் சரி, என் ஆத்துமா தேவ சமூகத்தில் சந்தோஷம் கொள்ள வேண்டும். குற்ற உணர்வு இல்லாதிருக்க வேண்டும் என்பதுதான் எனக்கு மிக முக்கியம்.

ஆவியானவர் தரும் எச்சரிக்கையை உணரனும்

சில வாரங்களில் அந்தக் குறிப்பிட்ட குடும்பத்தினர் என் ஆலயத்திற்கே நேரில் வந்து விட்டனர். மற்ற மூன்று வீடுகளுக்கும் நீங்கள் போனீர்கள். எங்கள் வீட்டுக்கு மட்டும் சில வாரங்களாக ஏன் வரவில்லை? என்றனர். நான் உண்மையைக் கூறினேன். உங்கள் வீட்டில் யாரும் என்னைக் கெடுக்கவில்லை. நானும் தவறு செய்யவில்லை. ஆனால் மற்ற குடும்பத்தை விட உங்கள் குடும்பத்தோடு அதிகம் நெருங்கி பழக விரும்புகிறேன். உங்கள் வீட்டில் மட்டும் என்னை ஏதோ ஒன்று கவருகிறதை உணருகிறேன். அதினிமித்தம் என் உள்ளத்தில் குற்ற உணர்வு உண்டாகி விட்டது. அதன்பின் என் ஜெபத்தில் சந்தோஷத்தை இழந்தேன் என்று விவரித்துக் கூறினேன். அவர்கள் ஒரு நல்ல விசுவாசிகளானபடியால் நான் கூறியதை தவறுதலாக எடுக்காமல் என் நிலை கண்டு மிகவும் சந்தோஷப்பட்டார்கள். எங்கள் வீட்டில் உங்களுக்கு சோதனை உண்டானால் எங்கள் வீட்டுக்கு நீங்கள் வரவே வேண்டாம். ஆனால் கணவனும் மனைவியுமாக நாங்கள் இரண்டு பேரும் நீங்கள் இருக்குமிடத்துக்கே வந்து ஜெபிப்போம் என்று கூறி என்னை ஊக்கப்படுத்தி இந்த எச்சரிக்கை உணர்வை எனக்குத் தந்த தேவனை அவர்களும் துதித்தார்கள். நானும் அவர்களோடு இணைந்து தேவனைத் துதித்தேன். அந்த ஜெப நேரம் எங்களுக்கு இன்பமாக இருந்தது. கர்த்தருக்கே ஸ்தோத்திரம். அந்த வீட்டுக்குப் போவதை நிறுத்தியவுடன் இப்போது என் ஜெபத்தில் பழைய சந்தோஷம் எனக்கு கிடைத்து விட்டது. அதன்பின் குற்ற உணர்வு இல்லாமல் தேவ சமூகத்தில் நான் நிற்க முடிந்தது.

மனச் சலனத்திற்கு எச்சரிக்கையாக இருங்கள்

வீடுகளைச் சந்திக்கும் ஊழியக்காரர்களுக்கு இந்த அனுபவம் பிரயோஜனமாக இருக்கும் என்று இதை எழுதுகிறேன். எந்த வீட்டுக்காவது (காரணத்தோடுதான் செல்ல வேண்டி இருந்தாலும்) அடிக்கடி செல்ல வேண்டும் போல மன நிலையில் விருப்பம் உண்டாகும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எந்த நபரோடாவது அதிகம் நெருங்கிப் பழக வேண்டும் அல்லது பேச வேண்டும் போல் மனதில் கவரப்படும்போது அல்லது சலனம் உண்டாகும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். யாரை பார்த்தால் மனதில் சலனம் உண்டாகிறதோ அந்த நபரை பார்ப்பதை தவிர்க்க முயல வேண்டும். அது மாத்திரமல்ல அதிக சிரிப்பு, தமாஷ் இவைகள் ஆவிக்குரிய சிந்தையை மாற்றி திசை திருப்பி விட்டுவிடும். நம் சரீரத்திலேயே பாவம் உண்டு. அது ஜென்ம பாவம். அதைத்தான் பரிசுத்த பவுல் ரோமபுரியாருக்கு கடிதம் எழுதும்போது ரோமர் 7:23, 17:20இல் **"என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்க காண்கிறேன். உண்டாயிருக்கிற பாவ பிரமாணத்துக்கு அது என்னை சிறையாக்கிக் கொள்ளுகிறது"** என்று தன் சரீரத்தையே குற்றம் சாட்டுகிறார்.

காம உணர்வைக் கட்டுப்படுத்துங்கள்

நாம் இரட்சிக்கப்பட்டு பரிசுத்தவான்களாக ஜீவித்தாலும் சரீரத்தில் உண்டாகும் சரீர உணர்ச்சிகளை, காம சிந்தனைகளை சரீரத்தை விட்டு அறவே நீக்க முடியாது. நாம் மரிக்கும் வரை இந்த உணர்ச்சிகள் நம் சரீரத்துக்குள் இருந்து கொண்டே தான் இருக்கும். வயதுக்கு ஏற்றபடி காம உணர்வுகள் மாறும். ஆனால் அது மரணம் வரை தொடரும். ஆனால் கர்த்தரின் பெலத்தால் அதைக் கட்டுப்படுத்த இயலும். செக்ஸ், காம எண்ணம் என்பது பாவம் அல்ல. அது கர்த்தரால் இயற்கையாகவே நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டதாகும். அந்த காம உணர்வு இல்லாமல் போனால் நீங்களும் நானும் சரியான மனிதர்களே அல்ல என்று கூறலாம். ஆகவே அந்த காம உணர்வை செயல்படுத்தத்தான் கர்த்தர் திருமணம் என்ற ஒழுங்கை ஏற்படுத்தினார். அந்த காம உணர்வை அந்த திருமணத்தில் தான் செயல்படுத்த வேண்டும். அதுவரை நம் உணர்ச்சிகளை நாம் கட்டுப்படுத்த வேண்டும்.

இதற்கு வேதத்தில் (இச்சையடக்கம்) என்று எழுதப்பட்டுள்ளது. இந்த தமிழ் மொழி பெயர்ப்பு சரியில்லை. ஆங்கிலத்தில் (செல்ஃப் கண்ட்ரோல்) என்று எழுதியுள்ளது. நம்மை நாமே உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். இயலாமல் போனால் உபவாச ஜெபத்தின் மூலம் கட்டுப்படுத்தலாம். என் வாழ்க்கையிலும் அப்படிப்பட்ட உபவாச ஜெபம் அடிக்கடி செய்வதால் தான் என் உணர்ச்சிகளையும் என்னால் மேற்கொள்ள முடிகிறது. ஜெப சிந்தை மேலோங்கி இருக்கும்போது பாவ சிந்தை உள்ளத்தில் அமுங்கி விடுகின்றது. ஜெபம் குறையும் போது பாவம் மேலோங்கி விடுகிறது. நாம் கிறிஸ்துவுக்குள் வந்தவுடன் அந்த சரீர உணர்ச்சிகளை ஓர் எல்லைக்குள் கட்டுப்படுத்திக் கொள்ள முடிகிறது. பிசாசு பாவத்தைக் கொண்டு வருகிறது உண்மைதான். ஆனால் அதே சமயம் **'பிசாசுக்கு இடம் கொடாதீர்கள்'** என்று வேதம் கூறுகிறதை மறந்துவிடக் கூடாது – எபேசி 4:27. நாம் இடம் கொடுத்தால் தான் பிசாசு நம்மை மேற்கொள்ள முடியும்.

பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள்

நாம் இடம் கொடுத்தால் தான் பிசாசு உள்ளே நுழையவும் முடியும். அதுவாக ஒரு போதும் நுழைவதில்லை. நுழைய அனுமதியும் இல்லை. ஜெபக் குறைவு உண்டாகும்போது நாம் பிசாசுக்கு இடம் கொடுக்கிறோம். தவறான நண்பர்களோடு சேரும் போது பிசாசுக்கு நாம் இடம் கொடுக்கிறோம். ஆபாச புத்தகங்கள், ஆபாச சம்பாஷணைகள் ஆகியவற்றை நீ நாடும்போது, பிசாசுக்கு மறைமுகமாக உள்ளே நுழைய இடம் கொடுக்கிறாய். வேதம் வாசிக்காமல் இருக்கும் நாளில் பிசாசுக்கு இடம் கொடுக்கிறோம் என்று அர்த்தம். **'நான் உனக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு உமது வார்த்தை என்னிருதயத்தில் வைத்திருக்கிறேன்'** என்று சங்கீதக்காரன் தன் அனுபவத்தைக் கூறுகிறான் – சங் 119:11.

பாவம் உன்னை தேடி வரும். ஜாக்கிரதை!

பிசாசு அல்லது பிசாசின் பாவ சிந்தை உன் மனதில் நுழையாமலிருக்க உன் சூழ்நிலைகளில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கூடிய வரை தனிமையிலிருக்க முயலாதே. அப்படி இருக்கக் கூடிய நிர்பந்தம் உண்டானால் வேதம் வாசி. ஆவிக்குரிய புத்தகங்களை வாசி. ஜெபி. இடைவிடாமல் தேவனோடு தொடர்பு வைத்துக் கொள். இரட்சிக்கப்படும் முன் பாவத்தை நீயாகவே தேடிப் போனாய். ஆனால் மனம் திரும்பிய பின் பாவம் உன்னைத்

தேடி வரும். இலவசமாய்ப் பாவம் செய்யவும் பிசாசு வசதி செய்து கொடுக்கும். இதற்குத் தான் உன் சூழ்நிலையில் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். டி.வி., சினிமா, நடிகைகளின் படங்களை பார்க்கும் போது இந்த பாவ சூழ்நிலை பாவ உணர்வு இவைகள் வாலிபர்களுக்கு மட்டுமல்ல, திருமணமாகி பிள்ளை பெற்றிருந்தாலும் அவர்களுக்கும் வரும் ஜாக்கிரதை.

என் வாழ்வில் ஒரு சோதனை

இரட்சிக்கப்பட்ட என் ஆரம்ப வாழ்க்கையிலே பாவம் பல முறை நான் இருக்கும் இடம் தேடி இலவசமாக வந்ததை அறிந்திருக் கிறேன். கர்த்தர் என்னை யோசேப்பைக் காத்தது போல பலமுறை காத்து இரட்சித்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஒருமுறை கிராமத்திலிருந்து ஒரு வாலிபப் பெண்ணை வைத்தியத்துக் கென்று அவளின் தகப்பன் சைக்கிளில் உட்கார வைத்து என் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தார். நான் அவளை பரிசோதித்து அவள் வியாதிக்கு 15 நாட்கள் தொடர்ந்து ஊசி போட்டுக் கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறினேன். அப்படியே அவள் தகப்பன் ஒவ்வொரு நாளும் அவளை சைக்கிளில் கூட்டி வந்து ஊசி போட்டுக் கொண்டு கூட்டிப் போவார். சில நாள் அவள் அண்ணன் அவளைக் கூட்டி வருவார். இப்படி நான்கைந்து நாட்கள் கடந்தன. ஒரு நாள் அவள் மட்டும் தனியாக என் ஆஸ்பத்திரிக்கு வந்தாள். காலையிலேயே அவள் வந்து விட்டாள் என்றாலும் அவளுக்குப் பின் வந்தவர்களையெல்லாம் முன்னுக்கு அனுப்பி விட்டு வியாதியஸ்தர்களின் வரிசையின் கடைசியில் போய் உட்கார்ந்து கொண்டாள். மற்ற எல்லா வியாதியஸ்தர்களும் போன பின் கடைசியாக அவள் வந்தாள். என்னை தனிமையாக சந்திக்கவே அவள் எல்லாருக்கும் கடைசியாக என் அறையில் நுழைந்தாள் என்பதை பிறகு அறிந்தேன்.

தனியாக வந்து தகாத விதமாய் நடந்தாள்

அவள் வந்தவுடன் அவளுக்கு வழக்கமாக போட வேண்டிய ஊசி மருந்தை எடுக்கப் போனேன். ஆனால் அவளோ தன்னை பரிசோதிக்க வேண்டும் என்று என்னை கட்டாயப்படுத்தினாள். தேவையில்லையே முதல் நாளே உன்னை பரிசோதித்து விட்டேன். இதே ஊசியைத் தான் 15 நாட்களும் தொடர்ந்து போட்டாக வேண்டும் என்றேன். ஆனால் அவள் நடந்து கொண்ட விதம், தன்னை பரிசோதிக்க வேண்டும என்று தன் வஸ்திரங்களை

விலக்கி காட்டிக் கேட்டுக் கொண்ட விதம் இவைகளை வைத்து அவளின் தவறான நோக்கத்தைப் புரிந்து கொண்டேன். பரிசோதனை டேபிளை விட்டு கீழிறங்கி நாற்காலியில் உட்காரச் சொன்னேன். இன்று ஏன் உன் தகப்பனோடு நீ வரவில்லை? வயலில் நாத்து நடுகிறார்கள். உன் அண்ணனைக் கூட்டிக் கொண்டு வந்திருக்கலாமே? வயலில் நாத்து நடும் வேலை இருக்கும் போது யாரும் வர மாட்டார்கள். வாலிபப் பெண் இப்படி தனியாக ஏழு மைல் நடந்து வரலாமா? நான் சந்தைக்கு பொருள்கள் வாங்க இப்படி தனியாக வந்து பழக்கம் இருக்கிறது. இப்படி என் கேள்விகளுக்கு பட்பட்டென்று பதில் கொடுத்துக் கொண்டே இருந்தாள். முடிவில் நான் நேரிடையாகவே அவளை எச்சரித்தேன். என்னதான் நீ சமாதானம் சொன்னாலும் வாலிபப் பெண் இப்படி தனியாக வருவது நல்லதல்ல. வெளிப்படையாகவே உனக்குச் சொல்கிறேன். இரண்டு தினங்களாக உன் நடவடிக்கை சரியில்லை. அது உனக்குத் தான் ஆபத்தை உண்டு பண்ணும். இப்படிக் கூறி முடித்தபின் அவள் அளித்த பதில் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அவள் பார்வை பாவம் செய்யத் தூண்டியது

அவள் குனிந்தபடியே கூறினாள். ஏன் பயப்படுகிறீர்கள்? இந்தப் பதில் அதைத் தொடர்ந்து அவள் என்னைப் பார்த்த பார்வை, என்னை பாவம் செய்ய தைரியப்படுத்தும் வகையில் இருந்தது. இந்தா பாரும்மா, உன் எண்ணம் எனக்குப் புரிகிறது. உனக்கு பயமில்லை என்று கூறினாய். ஆனால் என்னைக் குறித்து எனக்கு உணர்ச்சிகள் உண்டு. மனுஷன் என்ற முறையில் தவறு செய்ய எனக்கும் ஆசை உண்டு.

உன் பலவீனத்தைப் பயன்படுத்தி என் சரீரத்தை சந்தோஷப்படுத்த நான் விரும்பவில்லை. இந்த இடத்தில் வேறு யாராக இருந்தாலும் நீ கெடுக்கப்பட்டிருப்பாய். உனக்கென்று ஒரு வாழ்க்கை உண்டு. அது குற்ற உணர்ச்சி இல்லாததாக அமைய வேண்டும் என்று ஆலோசனை கூறி இயேசுவை அவளுக்கு அறிவித்தேன்.

என் பாவங்களுக்காக இயேசு மரித்தார்

'என் இயேசுவுக்கு எப்போது என்னை அடிமையாக்கிக் கொண்டேனோ அந்த நிமிட முதல் என் இயேசுவின் மனதை வேதனைப்படுத்தும்' எந்தக் காரியத்திலும் செயல்பட நான் முயல மாட்டேன், என் கைகளினால் நான் பாவம் செய்தால், அவர் கைகளில் இரத்தம் ஒழுகும். ஒருமுறை அவர் எனக்காகவும்

என் பாவத்துக்காகவும் தண்டனைகளை சகித்தார். பலமுறையும் பலமுறையும் என் பாவத்தால் அவரை வேதனைப் படுத்தி விட்டேன். இயேசுவுக்கு என்னை ஒப்புக் கொடுக்கும் முன் நானே பாவத்தைத் தேடி தெரு நாய் போல அலைந்தேன். இன்று கிறிஸ்துவை அறிவிக்க நன்றியுள்ள நாயாய் அவருக்காக அலைகிறேன் என்று என் சாட்சியை சுருக்கமாகக் கூறி முடித்தேன். ஆனால் அவனோ என் சாட்சியை ஏற்றுக் கொள்ள இஷ்டப்பட்டதாக தெரியவில்லை. இப்போது என் மேல் அவனுக்குக் கோபமும் ஆத்திரமும் வெளிப் பட்டது என்பதை கண்டேன். பிறகு அவனுக்கு வழக்காக போடும் ஊசி மருந்தைச் செலுத்தி அனுப்பினேன். மறுநாள் தன் தகப்பனுடன் வந்தான். என்னை வெறுப்புடன் நோக்கியவாறு ஊசிபோட்ட தன் கரங்களை காட்டினான். நான் அவனை அவன் தகப்பனிடம் காட்டிக் கொடுக்கவில்லை.

ஜெபம் குறையும் போது பிசாசு உள்ளே நுழைய எத்தனிப்பான்

அன்பான வாலிபர்களே, வாலிப சகோதரிகளே, விசுவாசிகளே, இந்த என் அனுபவ நிகழ்ச்சிகளை கொஞ்சம் வெளிப்படையாகவே எழுதி விட்டேன் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் தனக்கு வரும் சோதனைகளை வெளியே சொல்ல மனமில்லாமலும், அவர்களுக்கு ஆலோசனை கொடுக்க யாரும் இல்லை என்ற நிலையில் பலமுறையும் பலமுறையும் பாவச் சூழலில் விழுந்து தத்தளிக்கும் சிலர் உண்டு. அவர்களுக்கு இந்த என் அனுபவம் பிரயோஜனமாக இருக்கும். மேற்கண்ட நிகழ்ச்சி 1985ல் நடந்தபோதிலும் இதை எழுதிக் கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையிலும் அதே சோதனைகள் என்னை தொடர்கின்றன என்பதை நீங்கள் அறிய வேண்டும். இத்தனை வருடங்கள் அனுபவம் பெற்ற ஊழியனாக இருந்தாலும் பல ரூபங்களில் பிசாசு என்னை இப்போது சந்திக்க முயற்சிப்பதை நிறுத்தவேயில்லை. ஊழியம் அதிகமாகி என் ஜெபம் குறையும் போது பிசாசு மெல்ல நுழைய ஆரம்பிப்பான். இனம் புரியாத ஒரு வெறுமை என் உள்ளத்தில் தோன்றும்.

ஆகாதவனாய் போகாதபடிக்கு உன்னை ஒடுக்கு

அந்த ஆரம்ப நிலையிலேயே உபவாசம் செய்து அதை சரிப் படுத்திக் கொள்வேன். அப்படி உபவாசிக்கா விட்டால் மற்றவர் களுக்கு ஆலோசனை கொடுக்கும் நானும் பாவத்தில் விழ நேரும். அதனால் தான் அடிக்கடி உபவாச ஜெபம் எடுக்கிறேன். எந்த விசுவாசியானாலும் ஊழியக்காரனானாலும் அடிக்கடி உபவாசிக்க

வேண்டியது மிக மிக அவசியமாகும். ஊழியக்காரனுக்கும், விசுவாசிகளுக்கும் நிச்சயம் பின்மாற்றமும் பாவ சோதனைகளும் நிச்சயம் உண்டாகும். 'மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்' - 1கொரி 9:27 என்று பவுல் கூறுகிறது போல் சரீரத்தை ஒடுக்க வேண்டும். அது உபவாசத்தால் தான் முடியும். உபவாசத்தால் தான் சரீரமும் அடங்கும். அதன் பிறகு சரீரத்தை எளிதாக கீழ்ப்படுத்த முடியும். அதாவது நம் கட்டுப்பாட்டுக்குள் சரீரத்தைக் கொண்டு வர முடியும். இது என் சொந்த அனுபவம் ஆகும்.

எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள்

எத்தனை வருடம் வரை அல்லது எத்தனை வயது வரை இந்த முறையைக் கையாள வேண்டும் என்று சிலர் கேட்பார்கள். நாம் சாகும் கடைசி நிமிடம் வரை இதைத் தொடரத்தான் வேண்டும். சரீர காம உணர்ச்சிகள் நாம் சாகும் வரை நம்மை விட்டு நீங்காது. என்னை இந்த சோதனையில் தொடர்ந்து வெற்றி பெற வைத்த ஒரு ஜெபம் உண்டு. அது உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும் என்று இங்கு குறிப்பிடுகிறேன். ஒவ்வொரு நாள் காலையிலும் நம் சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புகளுக்காகவும் ஜெபித்து கர்த்தரின் பாதுகாப்பைப் பெற வேண்டும். தாவீது கூறுகிறான் 'ஆண்டவரே என் வாய்க்குக் காவல் வையும்.. என் இருதயத்தைத் துன்மார்க்கத்துக்கு இணங்க வொட்டாதேயும்' - சங்கீதம் 141:3,4. தாவீதின் மகன் சாலமோனும் தான் எழுதிய நீதிமொழிகளில் (4:23) 'எல்லாக் காவலோடும் உன் இருதயத்தை காத்துக் கொள்' என்று கூறுகிறார். கர்த்தர் நம் உடலில் ஒவ்வொரு உறுப்புகளுக்கும் கட்டுப்பாடும் காவலும் அளித்து காத்துக் கொள்வார்.

பார்வை பரிசுத்தமாக இருக்கட்டும்

கண்: முதலாவது ஒவ்வொரு நாள் காலையிலும் என் கண் களுக்காக ஜெபிப்பேன். நம் முழு உடம்பையும் பாவத்துக்கு உள்ளாக்குவது இந்தக் கண் கொண்டுதான். இருதயத்தின் வாசல் கண் என்று எழுதியிருக்கிறது. இந்தக் கண் வழியாக எதையெல்லாம் பார்க்கிறோமோ அவைகள் மனதையும் பாதிக்கும். அதன் விளைவால் சரீரமும் பாதிக்கப்படும். கர்த்தரே இந்தப்

பகல் முழுவதும் இந்தக் கண்களால் நான் பாவ காரியங்களைப் பார்க்கக் கூடாது. ஒருவேளை பார்க்க நேர்ந்தாலும் உடனே என் பார்வையைக் கட்டுப்படுத்த, எனக்குப் பெலன் வேண்டும். உளளத்தின் உணர்ச்சிகளை கிளறும் எந்தப் புத்தகத்தையோ, சினிமா போஸ்டரையோ பார்க்கக் கூடாது என்று ஜெபிக்க வேண்டும். இப்படி ஜெபித்து சென்றாலும் தெருவில் ஒட்டப்பட்டுள்ள சுவர் படங்களை நாம் காண நேரும் என்றாலும் நாம் காலையில் கண்ணின் காவலுக்காக ஜெபித்து பெலத்தை பெற்றுக் கொண்டால் அந்தப் படங்களை நாம் பார்த்தாலும் அது நம்மையும் நம் மனதையும் பாதிப்பதில்லை. அசந்தர்ப்பமாய்க் கண்ணில் ஆபாச காட்சி அல்லது உள்ளத்தை கிளறும் படம் பார்க்க நேருவது தவறல்ல. அதையே உற்றுப் பார்த்து ரசிப்பதில் தான் தவறு. அங்கு தான் பாவம் கர்ப்பம் தரிக்கிறது.

கால்களையும் கட்டுக்குள் வை

கால்கள்: இரண்டாவது என் கால்களுக்காக ஜெபிப்பேன். உமக்குப் பிரியமில்லாத எந்த இடத்துக்கும் அல்லது சோதனை உள்ள எந்த வீட்டுக்கும் நான் செல்லக் கூடாது. என் கால்களுக்கு ஒரு கட்டுப்பாடு வேண்டும் என்று ஜெபிக்க வேண்டும். எந்த இடத்தில் உனக்குச் சோதனை உண்டோ அந்த வீட்டுக்கு அல்லது அந்த இடத்துக்கு அடிக்கடி போகாதே. சோதனைக்குரிய நபரை சந்திக்கப் பிரியப்படாதே. அது ஊழியக்காரரானாலும் விசுவாசிகளானாலும், திருமணமானவர்களானாலும், திருமணம் ஆகாதவர்களானாலும், எச்சரிக்கையாக இரு. உன் ஆத்துமாவைக் காத்துக் கொள். பிசாசு சில ஊழியக்காரர் மூலமாகக் கூட உன்னைச் சோதிக்க முயலுவான். எச்சரிக்கையாக இரு. ஊழியம் செய்யச் செல்வது போல உன் உள்ளம் சில சமயங்களில் உன்னைத் திருப்திப்படுத்தி உன்னை விழத் தள்ளும் இடங்களுக்கு உன் கால்கள் மூலம் உன்னை அழைத்துச் செல்லும். அதனால் கால்களுக்கு ஒரு பரிசுத்த கட்டுப்பாடு தேவை.

இருதயம்: மூன்றாவது நான் என் இருதய சிந்தனைகளுக்காக ஜெபிப்பேன். **'என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்கு செவி கொடார்'** – சங். 66:18. பெரும்பாலான பெண்கள் கிரியைகளில் அல்லது செய்கைகளில்

[illegible]

[illegible] [illegible] தவிர்க்க

[illegible] உங்கள் படுக்கையில் உங்கள் இருதயத்தில் [illegible] பேசிக் கொண்டு அமர்ந்திருங்கள்". சங் 4:4. [illegible]

[illegible] காவலைப் பெற்றுக் கொள்

[illegible]

தொடர்ந்து ஏற்படுத்திக் கொள்வதால்தான் இன்றும் கர்த்தருடைய கிருபையோடு ஊழியத்தைப் பரிசுத்தத்துடன் தொடருகிறேன்.

எனக்கு உண்டான அதே சோதனை எல்லோருக்கும் உண்டாகும் என்று கூற இயலாது. அவரவர்களின் தொழில்கள், வேலை ஸ்தலங்கள், கல்லூரி ஸ்தலங்கள் இவைகளை அனுசரித்து தான் அந்தந்த சூழ்நிலைக்கேற்ப சோதனைகள் வரும். எந்த சூழ்நிலையாக இருந்தாலும், நம்மை நாமே சோதித்து அறிந்து அனுதினமும் பரிசுத்தப்படுத்தி, தேவ பாதுகாப்பிற்கு ஒப்புக் கொள்ளுங்கள்.

பெற்றோர்கள் கவனிக்க வேண்டியது

சோதனைகளுக்கு இடம் கொடுக்காத வகையில் தங்கள் பிள்ளைகளுக்கு அந்தந்த சூழ்நிலைக்கேற்ற அல்லது வயதுக்கேற்ற பாதுகாப்புகளை உண்டாக்கிக் கொடுங்கள். உறவினர்களோ அல்லது வேறு யாரானாலும் சரி, உங்கள் பிள்ளைகளை ஒரு வாலிபனோ வாலிபப் பெண்ணோ தனிமையில் சந்திக்க பழக சுதந்திரம் கொடுக்காதீர்கள். அது வயது முதிர்ந்தவரானாலும், ஊழியரானாலும் இவ்விஷயத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

எங்கும், எதிலும் எப்போதும் விழிப்பாயிருங்கள்

மிக அவசியமானால் யாராவது பெரியவர்கள் மேற்பார்வையில் பிள்ளைகளை சந்திக்க வைக்கலாம். அதற்கு நேரக் கட்டுப்பாடு மிக அவசியம். உறவினர்களின் வீடுகளுக்கும் அனாவசியமாக பெரியவர்கள் துணையில்லாது வாலிப பிள்ளைகளை அனுப்ப வேண்டாம். திருமணமானவர்களிடத்திலும் எச்சரிக்கையாக பழகுவது அவசியம். இவைகளில் கவலையீனமாக, கவனக் குறைவாக இருந்தால் பிசாசு உள்ளத்தில் பிரவேசிக்க நீங்கள் வழி உண்டாக்குகிறீர்கள்.

நம்முடைய சிந்தனைக்கு

* **'நிற்கிறேன் என்பவன் விழாதிருப்பானாக.'**
* **'ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது.' – 1** கொரி 7:1
* **'உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும்,**

அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாய் இரு.'– 1 தீமோ 4:12.

* **'பிசாசுக்கு இடங்கொடாமல் இருங்கள்.'**– எபேசி 4:27.

கர்த்தர் கூறுகிறார்: **'நான் பரிசுத்தராயிருக்கிறதைப் போல் நீங்களும் பரிசுத்தமாயிருங்கள்.'**

இயேசு கிறிஸ்து கூறினார்: நான் உங்களுக்குச் சொல்கிறேன். **'ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே (அவளோடே) விபச்சாரஞ் செய்தாயிற்று என்று கூறுகிறார்.'** – மத் 5:28

நவீன கால சோதனையும் பாவமும்

இதுவரை மொபைல், கம்ப்யூட்டர் கண்டுபிடிக்காத காலத்தில் வாலிப பிள்ளைகளுக்கு வரும் சோதனைகளைக் குறித்தும் அதிலிருந்து விலகுவதைக் குறித்தும் எழுதியிருந்தேன்.

ஆனால் இப்போது உலகமனைத்திலும் இந்தியாவிலும் அனைவரின் கரத்திலும் மொபைல் கண்டிப்பாக இருக்கிறது என்பது காலத்தின் கட்டாயமாகும். இதை எந்த விதத்திலும் தவிர்க்க இயலாது.

இப்படிப்பட்ட காலக்கட்டத்தில் பிசாசு மொபைல் வழியாகவும், இன்டர்நெட் வழியாகவும், டேபிலெட் வழியாகவும் வாலிப பிள்ளைகளின் மனதை கறைப்படுத்தி பாவத்தில் விழ வைக்கிறான். அவன் திட்டம் வெற்றி பெற தொடங்கி விட்டது. குறிப்பாக பேஸ்புக், ட்விட்டர் போன்றவைகளை நம்பி பலர் தங்களை அறியாது பலரிடம் பாவத்தில் விழுந்து போகிறார்கள். இது வயது வித்தியாசம் இல்லாமல் வாலியர் முதல் முதிர்ந்தோர் வரை பாவத்தை நோக்கி ஓட ஆரம்பிக்கிறார்கள்.

பேஸ்புக் நமக்குத் தேவையில்லை

வாலிப பிள்ளைகளுக்காகட்டும், குடும்பஸ்தராகட்டும் பேஸ்புக் என்பது தேவையில்லாதது ஆகும். சினிமா நடிகர், நடிகைகளுக்கு விபச்சாரிகளுக்கு, அரசியல்வாதிகளுக்கு ஒருவேளை அது மிகவும் பிரயோஜனப்படலாம். ஆனால் மற்ற யாருக்கும் இது தேவையில்லாத ஒன்றாகும்.

பேஸ்புக் ஆரம்பித்து எல்லா மொபைல் வைத்திருக்கிறவர்களும், அவர்களோடு நண்பர்களாக இருக்க வேண்டியது அவசியம் இல்லை. அவர்களுக்கு தங்கள் புகைப்படத்தை சினிமா காட்சி களை, தங்களைப் பெருமைப்படுத்தும் விஷயங்களை அனுப்பி அறிவிக்கிறார்கள். அதைப் பார்த்து நீங்கள் அவர்கள் கருத்துக்கு புகைப்படத்துக்கு லைக் கூறினாலும், விமர்சனம் செய்தாலும் அவர்களிடம் நீங்களாகவே போய் ஒட்டிக் கொளகிறீர்கள் என்று அர்த்தம்.

அதன் பின் வஞ்சக அல்லது கவர்ச்சி வார்த்தைகளை பேஸ்புக்கில் அவர்கள் எழுதி அனுப்ப தானாக சிலந்தி வலையில் போய் ஒட்டிக் கொள்ளும் பூச்சியைப் போல ஆகிவிடுவீர்கள். ஜாக்கிரதை. அதன்பின் அந்த தொடர்பை நீங்கள் விட நினைத் தாலும் அந்தக் கவர்ச்சி உங்களை திரும்ப திரும்ப அழைக்கும். உங்களைத் தூங்க விடாது. பேஸ் புக் நம்மை ஒன்றும் இல்லாமல் ஆக்கி விடும். மிகவும் பிடித்த வாலிபர் பேஸ் புக்கில் தன் புகைப்படத்தைப் போட்டு நட்பு கொள்ள விரும்புகிறவர்கள் என்னோடு சார்ட்டிங் வைத்துக் கொள்ளலாம் என்று எழுத அதில் கவரப்பட்டு சில பெண்கள் தொடர்பு கொள்ள ஆரம்பத்தில் நல்லவனைப் போல் பேஸ் புக்கில் காட்சியளித்தவனின் பேச்சுகள் ஆபாச வார்த்தைகளுக்குள் பிரவேசித்தது. ஒரு சில பெண்கள் வாலிபர்கள் அவர்களோடு தொடர்பை நிறுத்தினார்கள். சிலர் தொடர்ந்தார்கள்.

ஒருமுறை ஒருவன் தன்னை நிர்வாணமாக பேஸ்புக்கில் காட்ட அவனோடு மிகவும் நெருங்கிப் பழகின பெண் ஒரு கட்டத்தில் அவனை திருமணம் செய்ய இருந்தவள், உடனே அவன் நல்லவன் அல்ல என்பதை அறிந்து தொடர்பை நிறுத்தினாள்.

பேஸ்புக்கால் வாழ்வை இழந்த வனிதை

ஆனால் ஒரு வாரம் மட்டும் அவளால் தொடர்பை நிறுத்த முடிந்தது. ஆனால் மறுபடியும் மறுபடியும் அவனின் அந்த ஆபாச காட்சி அவள் உள்ளத்தில் தோன்றி, ரசிக்கத் தொடங்கி, மறுபடியும் தொடர்பு கொள்ள ஒரு நாள் அவன் அழைப்புக்கு இணங்கி கற்பழிக்கப்பட்ட நிலையில் கறைப்பட்டு போனாள். இப்போது இவன் அவளை திருமணம் செய்ய பிரியம் இல்லை என்று கூற அவள்

பதிப்பாசிரியர் குறித்து

துடிப்பும், வேகமும், விவேகமும், நாவன்மையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 72 வயது என்று நம்ப மாட்டார்கள். இந்திய விமானப்படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும். பின்னர் பென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்கலை நிகழ்ச்சிகள், பாட்டு, டிவி சீரியல்கள் என கலைத்துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன் முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப் படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர். இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளராகவும் இருந்தார். தேவன் இவரையும், இவர் குடும்பத்தாரையும் தெரிந்து கொண்ட விதம் மற்றும் இவரின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து செய்த எண்ணி மாளாத அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும் 3000க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறி வருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவர் எழுதிய சாட்சி புத்தகமும் மற்ற நூல்களும் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, சபைகளை பலப்படுத்துவதாக, சபையோரை ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமாக தெரிந்து கொண்டுள்ளார்.

Sundar Prints 9840199777